# திடக்கழிவு மேலாண்மை விதிகள் – 2016

(மத்திய அரசின் ஆங்கிலப் பதிப்பின் தமிழாக்கம்)



## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தமிழ்நாடு அரசு



**எஸ். பி. வேலுமணி அவர்கள்**
**நகராட்சி நிர்வாகம்,**
**ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டச்**
**செயலாக்கத்துறை அமைச்சர்.**

**“மந்திரம்கற் போம்வினைத் தந்திரம்கற் போம்;**
**வானையளப் போம் கடல் மீனையளப் போம்;**
**சந்திரமண் டலத்தியல் கண்டு தெளி வோம்;**
**சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம்கற் போம்.”**

என்ற மகாகவி பாரதியின் பாடல் வரிகளுக்கேற்ப சந்தி தெரு பெருக்கி, நகரை தூய்மைப்பட வைத்திட வேண்டி உருவாக்கப்பட்டுள்ள **“திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016**”ன் தமிழ் பதிப்பினை வெளிக்கொணர்ந்து அனைத்து தமிழ் மக்களும் தங்களது தாய் மொழியில் திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவத்தையும், கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும் அறிந்து கொள்ள இந்த பதிப்பு மிகவும் உதவிகரமாக திகழும்.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் “**தூய்மையான தமிழகத்தை**” நோக்கி சென்றிட வேண்டும் என்ற “2023ஆம் ஆண்டு தொலை நோக்கு பார்வையின் அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்திட வேண்டி தமிழக அரசு ஆண்டுதோறும் ரூ.100 கோடி அளவிற்கு 2013–ம் ஆண்டு முதல் சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த தருணத்தில் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள சென்னை உட்பட 12 மாநகராட்சிகள் மற்றும் 124 நகராட்சிகள், 528 பேரூராட்சிகளிலும் தற்போதைய கணக்கீட்டின்படி தினசரி 16,880 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகிறது. இவை உருவாகும் இடத்திலேயே, அதாவது வீடுகள், விற்பனை வளாகங்கள், தொழிற்சாலைகள் மற்றும் உணவகங்கள் தோறும்,

நேரிடையாகச் சென்று சேகரித்து, எடுத்து சென்று, மறு சுழற்சிக்குரிய பொருட்களை தனியாகவும், மக்கும் கழிவுகளை தனியாகவும் கையாண்டு உருமாற்றி உரமாகவும், மீத்தேன் வாயுவாகவும், பிற மின்சக்தியாகவும் மாற்றும் வகையில் தமிழக அரசு இதுவரை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக இந்த திட்டத்தை திறம்பட செயல்படுத்திடும் பொருட்டு “**திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016**” என்ற விதிகளைமத்திய அரசு கடந்த 2016ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8ம் நாள் அறிவித்தது. இந்த விதிகளின்படி திடக்கழிவுகளை உருவாக்குபவர்களின் கடமைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெருமளவில் திடக்கழிவுகளை உருவாக்கும் நிறுவனத்தினர், உணவகத்தினர், அலுவலக வளாகத்தினர் தங்களது வளாகங்களிலேயே உரிய முறையில் திடக்கழிவுகளை பிரித்து, சேகரித்து, முறைப்படி உருமாற்றி பயன்படுத்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மறுசுழற்சிக்கு உட்படுத்த முடியாத மக்கும் தன்மையற்ற, அதே நேரத்தில் மக்களின் பயன்பாட்டிற்கு தயாரிக்கப்படும் பொருட்களின் பயன்பாட்டினால் உருவாகும் திடக்கழிவுகளை சம்மந்தப்பட்ட உற்பத்தியாளர்களே உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து உரிய வசதிகளை ஏற்படுத்தி மேலாண்மை செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தெருக்களிலும், மழை நீர் வாய்கால்களிலும், நீர் பிடிப்புப் பகுதிகளிலும் திடக்கழிவுகள் கொட்டப்படுவதை தவிர்த்திடவும், குப்பைகளை எரிப்பதை தடுத்திடவும் இந்த **“திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016”ல்** வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனை அனைவரும் பின்பற்றி தங்களது கடமைகளை நிறைவேற்றினால் பாரதி கண்ட கனவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவும் நினைவாகி தூய்மையான தமிழகத்தை உருவாக்கி தூய்மை இந்தியாவின் முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்ந்திட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை – 9
16.03.2017

**நகராட்சி நிர்வாகம்,ஊரக வளர்ச்சி மற்றும்**
**சிறப்புத் திட்டச்செயலாக்கத்துறை அமைச்சர்.**



**க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப.,**
**அரசு முதன்மைச் செயலாளர்,**
**நகராட்சி நிர்வாகம் மற்றும்**
**குடிநீர் வழங்கல் துறை,**
**சென்னை–9.**

## திடக்கழிவு மேலாண்மை மற்றும் செயல்பாடுகள்

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் 16,880 டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகின்றன. தமிழகத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான முதற்கட்ட குப்பை சேகரிப்பு, இரண்டாம் நிலை சேகரிப்பான் மற்றும் பதப்படுத்தும் இயந்திரங்கள், தூய்மை இந்தியா மற்றும் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை நிதியின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. திடக்கழிவு மேலாண்மையில் பதப்படுத்தும் பணிகளாக உரம் தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், மறுசுழற்சி பொருள் சேகரிப்பு மையம் அமைத்தல், தேங்கிய குப்பைகளில் உயிரி அகழ்வு மூலம் நிலத்தை மீட்டெடுத்தல் போன்ற பணிகள் சிறப்பாக செயல்பாட்டில் உள்ளது. திடக்கழிவுகளிலிருந்து உரம் மற்றும் எரிபொருள் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

நிதிநிலைமை நலிவுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளை செயற்படுத்த ஆண்டுக்கு ரூபாய் 100 கோடி திடக்கழிவு மேலாண்மை சிறப்பு நிதித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மக்கும் தன்மையுள்ள கழிவுகளை குறைத்திடவும் முறையாக பயன்பாட்டிற்கு கொண்டு வரும் நோக்கத்துடன் உயிரி எரிவாயு கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. திடக்கழிவு மேலாண்மை பணிகளை திறம்பட செயல்படுத்த குப்பை நெருக்கும் எந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக/ இலகுரக வாகனங்கள், டிப்பர் வாகனங்கள், இயந்திர பெருக்கிகள், முன்பின் பளுத்தூக்கிகள் மற்றும் புல்டோசர்கள் போன்ற வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. துப்புரவு பணியாளர்களின் பாதுகாப்புக்காக அவர்களுக்கு வாய்கவசம், கையுறை மற்றும் இரவில் ஒளிரும் ஆடை வழங்கப்பட்டுள்ளன. பேரூராட்சிகளில் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் குப்பை சேகரிப்பதற்கும், தரம் பிரிப்பதற்கும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அறிவியல் முறைப்படி, நிலப்புதைக்களம் உருவாக்குதல், குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு வளம் மீட்பு பூங்காவிற்கு எடுத்துச்செல்லுதல், உரம் ஆக்குதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், இப்பணிகள் சிறக்கும் பொருட்டு மத்திய அரசு வெளியிட்டுள்ள "திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016" உயர் அலுவலர்கள் முதல் கடை நிலை

ஊழியர்கள் வரையிலும் மற்றும் பொது மக்கள் எளிதாக புரிந்துகொண்டு நடைமுறைப் படுத்தும் வகையில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

கழிவுகளை உற்பத்தி செய்வோரின் கடமைகள் என்னென்ன, அவைகளை தங்கள் வீடுகளிலேயே, அதாவது கழிவுகள் உருவாகும் இடத்திலேயே, அதனை எப்படி உருமாற்றலாம் எனவும், கழிவுகளை தரம் பிரித்து, மறு சுழற்சி செய்தல், தரம் பிரித்த கழிவுகளை எவ்வாறு அதனை சேகரிப்பவரிடம் ஒப்படைப்பது, கழிவுகளை எவ்வாறு பயனுள்ள பொருட்களாக மாற்றம் செய்வது போன்ற தகவல்களை உள்ளடக்கியதாக இவ்விதிகள் உள்ளன. ஒவ்வொரு துறைக்கும் திடக்கழிவு மேலாண்மையில் அவர்களின் பங்கு பணி என்ன, அவைகளை எந்த முறையில் திறம்பட நிர்வகிப்பது எனவும், கண்காணிப்பு முறைகள் என்னவென்பது குறித்தும் மிக தெளிவாக எடுத்து சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விதிகள் அனைத்தையும் முறையாக பின்பற்றினால், குப்பையே இல்லாத மாநிலமாக தமிழகம் மாறும்.

சென்னை – 9
16.03.2017

**அரசு முதன்மைச் செயலாளர்**
**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

## **சுற்றுச்சூழல், வனம் மற்றும் தட்ப வெப்ப மாற்றத்திற்கான அமைச்சகம்**

## **அறிவிக்கை**

## **புதுடெல்லி, 8 ஏப்ரல், 2016**

S.O.1357(E) 2015 ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை வரைவு விதிகளை **03.06.2015** ஆம் நாளிட்ட மத்திய அரசிதழின் பாகம் II, பிரிவு **3**(i) உட்பிரிவில் **03.06.2015** ஆம் நாளிட்ட சுற்றுச்சூழல், வனம், தட்ப வெப்ப மாற்ற அமைச்சகத்தின் G.S.R 451(E) ஆம் எண் அறிவிக்கையின்கீழ் வெளியிடப்பட்டுள்ளதாலும், **2000** ஆம் ஆண்டு நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளை இரத்து செய்து விட்டு அதற்கு பதிலாக, **2015** ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகள் குறித்த மேற்சொன்ன அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து **60** நாட்கள் கால அளவு முடிவடைவதற்கு முன்னர், அதனால் பாதிக்கப்படக்கூடிய நபர்களிடமிருந்து கருத்துரைகளை அல்லது மறுப்புரைகளை கோரியுள்ளதாலும்

அவ்வரசிதழ்களின் நகல்கள், **2015** ஆம் ஆண்டு ஜுன் மாதம் **3** ஆம் நாள் அன்று பொது மக்களுக்குக் கிடைக்கும் பொருட்டு செய்யப்பட்டதாலும்,

குறிப்பிட்ட காலவரையறைக்குள் பெறப்பட்ட மறுப்புரைகள் மற்றும் கருத்துரைகள் மத்திய அரசால் உரிய வகையில் பரிசீலிக்கப்பட்டதாலும்

எனவே, தற்போது சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் **1986** ஆம் ஆண்டு **(29/1986)** பிரிவுகள் **3**, **6** மற்றும் **25–**ல் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரங்களைக் கொண்டும், **2000** ஆம் ஆண்டு நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளை இரத்து செய்து விட்டு அதற்குப் பதிலாகவும் அவ்வாறு இரத்து செய்வதற்கு முன்னர் ஏற்கனவே, செய்யப்பட்ட அல்லது செய்ய விடுபட்டவை தவிர்த்து தவறுகள் அல்லது விடுபடுதல் பொருட்டு, திடக்கழிவு மேலாண்மைக்காக மத்திய அரசு கீழ்க்காணும் விதிகளை இயற்றியுள்ளது, அவையாவன:-

**1) குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:**

1) இந்த விதிகள் 2016 ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகள் என அழைக்கப்படலாம்.

2) இவை அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**2) பொருந்துகை:** 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட தனி விதிகளின் கீழ் இடம்பெற்றுள்ள தொழிற்சாலைக் கழிவு, ஆபத்தான கழிவு, ஆபத்தான வேதிப்பொருட்கள், உயிரியல் மருத்துவக்கழிவுகள், மின் கழிவுகள், ஈய அமில மின்கலங்கள், கதிரியக்க கழிவுகள் ஆகியவை நீங்கலாக, அந்தந்த மாநில அரசுகளால் அவ்வப்போது அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு, நகர்புற விரிவாக்கத்தினால் உருவாக்கக்கூடிய நகர்ப்புறத்தின் வெளிப்புறப்பகுதிகள், பதிவுத்துறை தலைவர் மற்றும் இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையரால் அறிவிக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நகரங்கள் அறிவிக்கப்பட்ட பகுதிகள், அறிவிக்கப்பட்ட நகரங்கள், இந்திய இரயில்வே துறையின்கீழ் வரும் பகுதிகள் விமானத்தளங்கள், துறைமுகங்கள், பாதுகாப்புப்படையின் பகுதிகள், சிறப்பு பொருளாதார மண்டலங்கள் மாநில மற்றும் மத்திய அரசு நிறுவனங்கள் அந்தந்த மாநில அரசுகளால் அவ்வப்போது அறிவிக்கப்பட்ட வழிப்பாட்டுத் தலங்கள், மதம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கு இவ்விதிகள் பொருந்தும்.

**3) வரையறைகள்:**

(1) இந்த விதிகளில் சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி, மற்றபடி,

1. ***உயிர்வளி நிலையில் உரமாக்கல்*** என்றால் உயிர்வளி உள்ள நிலையில் உயிரகப் பொருட்களை நுண்ணுயிர் மூலம் சிதைக்கச் செய்யும் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட செயல்முறை என்று பொருள்படும்;
2. ***உயிர்வளியில்லாத நிலையில் பக்குவப்படுத்தல் (புழுக்குதல்)*** என்றால் உயிர்வளி இல்லாத நிலையில் உயிரகப் பொருட்களை நுண்ணுயிர் மூலம் சிதைக்கச் செய்யும் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட செய்முறை என்று பொருள்படும்;
3. ***"அங்கீகாரம்"*** என்றால் நேர்விற்கேற்ப, திடக்கழிவை செய்முறைப்படுத்துதல் மற்றும் அப்புறப்படுத்துதல் ஆகிய பணிக்குப் பொறுப்புடைய இயக்குபவர் அல்லது நகர்ப்புர உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது ஏனைய யாதொரு முகமைக்கு மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசுக் கட்டுப்பாட்டுக் குழுவினால் வழங்கப்படும் அனுமதி ஆகும்.

4. ***“மக்கும் உயிரி கழிவுகள்”*** என்பது யாதொரு கனிம பொருளையும் நுண்ணுயிர்களால் எளிமையாக நிலையான சேர்மங்களாகச் சிதைக்கக்கூடிய ஏதேனும் உயிரகப் பொருள் என்று பொருள்படும்.
5. ***“உயிரி மீதேன் ஆக்குதல்”*** என்பது உயிரி மீத்தேன் வாயு உற்பத்தி செய்ய செறிவூட்டப்பட்ட நுண்ணுயிர் மூலம் உயிரகப் பொருள்களின் நொதிச்சிதைவைக் கட்டுப்படுத்துகிற ஓர் செய்முறை என்று பொருள்படும்.
6. “***வணிகக்குறி உரிமையாளர்”*** என்பவர் ஒரு தனி நபரோ ஒரு நிறுவனமோ எந்த ஒரு பொருளையும் பதிவு செய்யப்பட்ட வணிகக்குறி அடையாளத்துடன் விற்பனை செய்பவர் என்று பொருள்படும்.
7. ***“இடைத்தாங்கும் மண்டலம்”*** என்பது 5 TPD கொள்ளளவுக்கு மேற்பட்ட திறன் கொண்ட திடக்கழிவை செய்முறைப்படுத்துகிற மற்றும் சேமித்து வைக்கிற கழிவுகளைக் கையாளப் பராமரிக்கப்படும் வளர்ச்சியற்ற பகுதியாகும். இது திடக்கழிவு செய்முறைகள், ஒருவகை செய்கிற கழிவுகள் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட பகுதி மற்றும் மொத்தப்பகுதிக்குள் பராமரிக்கப்படும் பகுதி என்று பொருள்படும்.
8. ***“மொத்த கழிவு உருவாக்குபவர்”*** என்பது ஒரு நாளைக்கு சராசரியாக 100 கிலோவுக்கு அதிகமான அளவுள்ள கழிவுகளை உருவாக்கும் கட்டிடங்களை பயன்படுத்தும் மத்திய அரசுத் துறைகள் அல்லது அதன்கீழ் இயங்கும் நிறுவனங்கள், மாநில அரசுத் துறைகள் அல்லது அதன் கீழ் இயங்கும் நிறுவனங்கள் உள்ளாட்சி அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது தனியர் நிறுவனங்கள், மருத்துவமனைகள், மருத்துவ சிகிச்சை நிலையம், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், இதர கல்வி நிறுவனங்கள், மாணவர் விடுதிகள், உணவகங்கள், வணிக நிறுவனங்கள், சந்தைகள், வழிபாட்டுத் தலங்கள், விளையாட்டு அரங்கங்கள் மற்றும் விளையாட்டு வளாகங்கள் உள்ளிட்டவை என்று பொருள்படும்.
9. ***“துணை விதிகள்”*** என்பது உள்ளாட்சி அமைப்புகள், மக்கள் தொகை கணக்கெடுப்பு நகரம் மற்றும் அறிவிக்கப்பட்ட நகரிய பகுதிகளில் தங்கள் அதிகார வரம்பு எல்லைக்குள் முனைப்பாக இத்தகைய விதிகளைச் செயல்படுத்துவற்கு முறைப்படுத்தப்பட்ட கட்டமைப்பு என்று பொருள்படும்.

10. ***"மக்கள் தொகை கணக்கெடுப்பு நகரம்"*** என்பது இந்திய பதிவுத்துறைத் தலைவர் மற்றும் இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையரால் வரையறுக்கப்பட்ட ஒரு நகர்புரப்பகுதி என்று பொருள்படும்.

11. ***"எளிதில் தீப்பிடிக்கும் கழிவு"*** என்பது நெகிழி மற்றும் மரக்கூழ் போன்ற குளோரின் செறிவூட்டப்பட்ட பொருட்கள் தவிர்த்து, குறைந்தபட்ச கலோரி மதிப்புடைய 1500 கிலோ கலோரிக்கு அதிகமான உயிரிசாராத மக்காத மறுசுழற்சி செய்யமுடியாத மீண்டும் பயன்படுத்த முடியாத, அபாயகரமில்லாத திடக்கழிவு என்று பொருள்படும்.

12. ***"கூட்டு உரமாக்கல்"*** என்பது உயிரகப் பொருட்களை நுண்ணுயிர் மூலம் சிதைக்கச் செய்யும் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட செய்முறை என்று பொருள்படும்.

13. "***ஒப்பந்ததாரர்***" என்பது சேவையை அளிக்கிற அதிகாரமன்றத்திற்காக பணி அல்லது சேவையை மேற்கொள்வதற்காக பொருட்கள் அல்லது தொழிலாளர்களை வழங்குவதற்காக ஒரு நபரோ, ஒரு நிறுவனமோ செய்து கொள்கிற ஒப்பந்தம் என்று பொருள்படும்.

14. ***"இணைச் செயலாக்கம்"*** என்பது தொழிலகம் செய்முறையில், 1500 கி.கலோரி மதிப்புக்கும் மேற்பட்ட மதிப்பு கொண்ட உயிரிசாராத மக்காத மற்றும் மறுசுழற்சியற்ற திடக்கழிவை, மூலப் பொருளாக அல்லது எரிசக்தி ஆதாரமாக அல்லது இயற்கை கனிம வளங்களுக்கும் படிம எரிபொருட்களுக்கும் மாற்றாக அல்லது அதற்குத் துணை புரிவதற்காகப் பயன்படுத்துதல் என்று பொருள்படும்.

15. ***"பரவலாக்கப்பட்ட செய்முறை"*** என்பது செய்முறைபடுத்துவதற்காக அல்லது ஒருவகை செய்வதற்காக, திடக்கழிவை, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்வதைக் குறைப்பதற்காக உயிரி மக்கும் கழிவை செய்முறைப்படுத்துவதை அதிகரிப்பதற்காகவும், கழிவு உருவாக்கப்பட்ட ஆதாரத்திற்கு நிகரான அளவில் மறுசுழற்சி பொருட்களைப் பெறுவதற்காகவும் பரவலாக்கப்பட்ட வசதிகளை நிறுவுதல் என்று பொருள்படும்.

16. ***"ஒருவகை செய்தல்"*** என்பது அட்டவணை–1ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதப்படுத்தியப் பிறகு எஞ்சும் திடக்கழிவு மற்றும் தெருக்குப்பைகள் மற்றும் நிலத்தின் மேற்பரப்பு வடிகால்களிலிருந்து கிடைக்கும் வண்டல்கள், நிலத்தடி நீர், மேற்பரப்பு நீர் மற்றும் சுற்றுப்புற காற்று தூய்மைக்கேடுறுவதையும், விலங்குகள் அல்லது பறவைகளை ஈர்ப்பதைத் தடுப்பதற்காக இறுதியான பாதுகாப்பான முறையில் அகற்றுதல் என்று பொருள்படும்.

17. ***“வீடுகள் சார்ந்த அபாயகரமான கழிவு”*** என்பது வீட்டு அளவில் உருவாக்கப்படும் தூக்கி எறியப்பட்ட வர்ண டப்பாக்கள், பூச்சிக் கொல்லி கொள்கலன்கள், CFL பல்புகள், குழல் விளக்குகள், காலாவதியான மருந்துகள், உடைந்த பாதரசமானிகள், உபயோகப்படுத்தப்பட்ட பேட்டரிகள், பயன்படுத்தப்பட்ட ஊசிகள் மற்றும் பீச்சாங் குழல்கள் மற்றும் அசுத்தமான அளவிகள் என்று பொருள்படும்.

18. ***“வீடு வீடாகச் சேகரித்தல்”*** என்பது குடும்பங்கள், கடைகள், வணிக நிறுவனங்கள், அலுவலகங்கள், நிறுவனங்கள் அல்லது ஏனையதொரு குடியிருப்பில்லாத வளாகங்களின் வாயிலுக்கருகே வந்து திடக்கழிவினை சேகரிப்பது என்று பொருள்படும். அத்தகைய கழிவுகளை சமூதாய வீடுகள், பல மாடிகளைக் கொண்ட கட்டிடம் மற்றும் தொகுப்பு வீடுகள், பெரிய குடியிருப்பு, வணிக அல்லது நிறுவன வளாகங்கள் அல்லது நில மனையிடம் ஆகியவற்றின் கழிவுகளை ஒவ்வொரு நுழைவு வாயில் அல்லது தரைத்தளத்தில் அதற்கென நியமிக்கப்பட்ட இடங்களில் சென்று சேகரிப்பதும் இதில் அடங்கும்.

19. ***“உலர் கழிவுகள்”*** என்பது மக்கும் உயிரி கழிவுகள் மற்றும் தெருக்குப்பைகளை சேகரிப்புகள் மற்றும் பிற கழிவுப் பொருள் மட்டுமல்லாது மறுசுழற்சி செய்யும் கழிவுகள் மற்றும் மறுசுழற்சியற்ற கழிவுகள், தீப்பிடிக்கும் கழிவுகள் மற்றும் பெண்கள் பயன்படுத்தும் சுகாதார அணையாடை மற்றும் குழந்தைகளுக்கான அணையாடை ஆகியன அடங்கும்.

20. ***“குப்பைகளைக் குவிக்கும் தளங்கள்”*** என்பது உள்ளாட்சி அமைப்புகளால் சுகாதார முறையில் குப்பைகளை நிலத்தில் நிரப்புதல் என்ற விதிகளைப் பின்பற்றாமல் திடக்கழிவுகளை சேமித்து வைக்க பயன்படுத்தப்படும் ஒரு நிலம் என்று பொருள்படும்.

21. ***“விரிவுப்படுத்தப்பட்ட தயாரிப்பாளர் (EPR) பொறுப்பு”*** என்பது சிப்பம் செய்யப்பட்ட பொருட்களின் காலாவதி நாட்கள் வரையில் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் மேலாண்மைக்கு செய்வதற்காக நெகிழி, தகரம், கண்ணாடி மற்றும் நெகிழிப் பெட்டிகள் முதலிய சிப்பம் செய்கிற பொருட்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர்களுக்கு உள்ள பொறுப்பு என்று பொருள்படும்.

22. ***“வசதி”*** என்பது எந்த நிறுவனமாக இருந்தாலும் அங்கு திடக்கழிவு மேலாண்மை செயல்முறைகளான அதாவது பகுப்பு, மீட்பு, சேமிப்பு, தொகுப்பு, மறுசுழற்சி செயலாக்கம், சுத்திகரிப்பு அல்லது பாதுகாப்பாக அகற்றுதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகிற யாதொரு நிறுவனம் என்ற பொருள்படும்.

23. ***“அபராதம்”*** என்பது இந்த விதிகள் மற்றும் / அல்லது துணைவிதிகளில் அடங்கியுள்ள கட்டளைகளுக்கு இணக்கமாகச் செயல்படாததற்காக, துணை விதிகளின் கீழ் கழிவு உருவாக்குபவர்கள் அல்லது கழிவை செய்முறைப்படுத்தலை மற்றும் அகற்றுதல் வசதிகளை இயக்குவோர் மீது விதிக்கப்படும் தண்டத்தொகை என்று பொருள்படும்.

24. ***“படிவம்”*** என்பது இந்த விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு படிவம் என்று பொருள்படும்.

25. ***“கையாளுதல்”*** என்பதில் திடக்கழிவுகளின் பகுப்பு, பிரித்தெடுத்தல், பொருள் மீட்பு, சேகரித்தல், இரண்டாம்நிலை சேமிப்பு, சிதறடிப்பு, மூட்டையாகக் கட்டுதல், நசுக்குதல், ஏற்றுதல், இறக்குதல், கொண்டு செல்லுதல், செய்முறைப்படுத்தல் மற்றும் திடக்கழிவுகளை அகற்றல் ஆகியவை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அடங்கும்.

26. ***“மந்தங்கள்”*** (இயக்க ஆற்றல் அற்றவை) என்பது மக்காத உயிரி கழிவுகள், மறுசுழற்சி செய்ய இயலாத அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய தெருக்குப்பைகள் அல்லாத தூசிகள் மற்றும் மேற்பரப்பு வடிகால்களிலிருந்து அகற்றப்பட்ட வண்டல் கழிவுகள் என்று பொருள்படும்.

27. ***“எரித்து சாம்பல் ஆக்குதல்”*** என்பது எரித்தல் அல்லது வெப்பத்திடக்கழிவை அதிக வெப்ப நிலையில் சிதைக்கும் ஒரு பொறியியல் செயல்முறை என்று பொருள்படும்.

28. ***“முறைசாரா கழிவு சேகரிப்பாளர்”*** என்பதில் மறுசுழற்சி பொருட்களை பிரித்து, விற்பனை மற்றும் கொள்முதல் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள், சங்கங்கள் அல்லது கழிவு வர்த்தகர்கள் அடங்குவர்.

29. ***“திடக்கழிவு கசிவுநீர்” (லீசேட்ஸ்)*** என்பது திடக்கழிவிலிருந்து கசியும் திரவப்பொருள் அல்லது மற்ற கழிவுகள் மற்றும் அதிலிருந்து கரைக்கப்பட்ட அல்லது தங்கியிருக்கும் பொருளிலிருந்து வரும் திரவக்கழிவு என்று பொருள்படும்.

30. ***“உள்ளாட்சி அமைப்பு”*** இந்த விதிகளை பொறுத்தமட்டில் உள்ளாட்சி அமைப்பு என்பது எத்தகைய பெயரில் இந்தியாவில் உள்ள வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் அழைக்கப்பட்டாலும் மாநகராட்சிகள் நகர் நிகாம், நகராட்சி மன்றம், நகர் பாலிக்கா, நகர் பாலிகாபரிஷத், நகராட்சி வாரியம், நகரப்பஞ்சாயத்து மற்றும் பேரூராட்சி மக்கள் தொகை கணக்கெடுப்பு

நகரங்களிலும் அறிவிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் அறிவிக்கப்பட்ட தொழிலக நகரியங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

31. ***“பொருட்கள் மீட்பு வசதிகள் (MRF)”*** என்பது விதி 2இல் குறிப்பிட்டுள்ள எளிதில் கூட்டு உரமாக்கப்பபடாத திடக்கழிவுகளை உள்ளாட்சி அமைப்பு அல்லது ஏதேனும் நிறுவனம் தற்காலிகமாக சேமித்து வைக்கும் வசதி என்று பொருள்படும் அல்லது ஒரு நபர் என்று பொருள்படும் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் செய்முறைபடுத்தலுக்காக அல்லது அகற்றுவதற்காக கழிவுகளை வழங்குவதற்கு முன் அல்லது எடுத்து செல்வதற்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட கழிவுகளை சேகரிக்கிற முறைசாரா துறை, முறையற்ற மறுசுழற்சி செய்வோர் அல்லது உள்ளாட்சி மன்றத்தால் பணியமர்த்தப்பட்ட ஏனைய பணியாளர் அல்லது 2ஆம் விதியில் குறிப்பிட்டுள்ள நிறுவனம், பல்வேறு கழிவு பொருள்களிலிருந்து பிரித்தல், தரம்பிரித்தல், மற்றும் மறுசுழற்சி செய்யத்தக்கவற்றை பெறுதல் ஆகியவை வசதி என்று பொருள்படும்.

32. ***“மக்காத உயிரி கழிவுகள்”*** என்பது நுண்ணுயிர்களால் எளிமையான நிலையான சேர்மங்களாக சிதைக்க முடியாதவை என்று பொருள்படும்.

33. ***“வசதி ஒன்றை இயக்குபவர்”*** என்பது திடக்கழிவுகளை கையாளுவதற்கான வசதி ஒன்றை உடைமையாக பெற்றுள்ள அல்லது இயக்குகிற ஒரு நபர் அல்லது நிறுவனம் என்று பொருள்படும். அவர்கள், உள்ளாட்சி அமைப்பாகவோ அதனால் நியமிக்கப்பட்ட நிறுவனமாகவோ, முகவரமைப்பாகவோ இருக்கலாம்.

34. ***“முதன்மை சேகரிப்பு”*** என்பது கழிவுகளின் உற்பத்திக்கு ஆதாரமான வீடுகள், கடைகள் அலுவலகங்கள் மற்றும் ஏனைய யாதொரு குடியிருப்பு இல்லாத வளாகங்கள் அல்லது யாதொரு சேகரிப்பு மையங்கள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளால் குறிப்பிட்டுள்ள மையங்களிலிருந்து பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல், சுமை ஏற்றுதல் மற்றும் அகற்றுதல் என்று பொருள்படும்.

35. ***“செய்முறைப்படுத்துதல்”*** என்பது யாதொரு அறிவியல் சார்ந்த செயல்முறைப்படுத்துதல் என்று பொருள்படும். இதில், திடக்கழிவுகளை மறுபயன்பாட்டிற்காக, மறுசுழற்சிக்காக பிரிக்கப்பட்ட புதிய பொருளாக மாற்றுவதற்காக கையாளப்படுகிறது.

36. ***“மறுசுழற்சி”*** என்பது பிரிக்கப்பட்ட மக்காத உயிரி திடக்கழிவுகளை மூலத்தயாரிப்புகளை ஒத்திருக்கிற அல்லது ஒத்திராத புதிய தயாரிப்புகளை

உற்பத்தி செய்தவற்கான புதிய பொருளாக அல்லது தயாரிப்பு பொருளாக அல்லது மூலப்பொருளாக மாற்றுவதற்கான செய்முறை என்று பொருள்படும்.

37. ***''மறு வளர்ச்சி''*** என்பது பழைய குடியிருப்புகள் அல்லது வணிக கட்டடங்களை பழுதடைந்த நிலையில் இருக்கும் அக்கட்டடங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்புகள் உள்ள அதே இடத்தில் மீண்டும் கட்டியெழுப்புதல் என்று பொருள்படும்.

38. ***''மறுத்து பெறப்படும் எரிபொருள்''*** என்பது எளிதில் தீப்பற்றக்கூடிய திடக்கழிவின் பகுதியான குளோரின் கலந்த பொருட்களை தவிர நெகிழி, மரம், மரக்கூழ் அல்லது உயிரக கழிவு போன்ற திடக்கழிவுகளிலிருந்து உலர்த்துதல், துண்டு துண்டுகளாக சிதைத்தல், நீர்க்கூற்றினை அகற்றுதல், சுருக்குதல் ஆகியவற்றின் மூலம் சிறு மணிகள் அல்லது இழைக்கற்றை வடிவில் பெறுகிற எரிபொருள் என்று பொருள்படும்.

39. ***''எஞ்சிய திடக்கழிவு''*** என்பது மறுசுழற்சிக்கோ, மேற்கொண்டு செயல்முறைப்படுத்துவதற்கோ பயன்படாத கழிவு மற்றும் திடக்கழிவுகள் செய்முறை வசதிகளிலிருந்து நிராகரிக்கப்பட்ட திடக்கழிவு என்று பொருள்படும்.

40. ***''சுகாதார முறையில் கழிவுகளை கொட்டிப் புதைத்தல்''*** என்பது எஞ்சிய திடக்கழிவு மற்றும் நிலத்தின் மீதிருக்கும் இயக்க ஆற்றலற்ற கழிவுகளை நிலத்தடி நீர், நிலமேற்பரப்பு நீர் மற்றும் காற்றிலிருந்து தூசிகள் ஊறுவிளைவிக்கும் காற்று, துர்நாற்றம், தீ ஆபத்து, விலங்கு அச்சுறுத்துதல், பறவை அச்சுறுத்துதல், செல்லப்பிராணிகள் அல்லது கொறித்துண்ணிகள், பசுமை வீடு வாயு வெளியேறுதல் தொடர்ச்சியான கரிம மாசுகள் சாய்வு ஸ்திரமின்மை மற்றும் மண் அரித்தல் போன்றவற்றிலிருந்து பிரித்யேகமாக வடிவமைக்கப்பட்ட பாதுகாப்பு காரணிகளைக் கொண்டு கடைசி மற்றும் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துதல் என்று பொருள்படும்.

41. ***''சுகாதாரக் கழிவுகள்''*** என்பது பயன்படுத்தப்பட்ட குழந்தை அணையாடைகள், பெண்கள் பயன்படுத்தும் சுகாதார அணையாடைகள் அல்லது துடைப்பான்கள், உறி பஞ்சுகள், ஆணுறைகள், தாள்கள் மற்றும் இன்னபிற கழிவுகளை உள்ளடக்கிய கழிவுகளை குறிப்பதாகும்.

42. ***''அட்டவணை''*** என்பது இந்த விதிகளில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையை குறிப்பதாகும்.

43. ***“இரண்டாம் நிலை கழிவு சேமிப்பு”*** என்பது இரண்டாம் நிலை கழிவு சேமிப்பு இடங்களில் அல்லது பொருட்கள் மீட்பு (MRF) அல்லது செய்முறை அல்லது அகற்றுகிற பணிகளுக்கு கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்ட தொட்டிகளிலிருந்து எடுக்கப்பட்ட திடக்கழிவுகளை தற்காலிகமாக சேமித்து வைத்தல் என்று பொருள்படும்.

44. ***“பிரித்தெடுத்தல்”*** என்பது பலதரப்பட்ட திடக்கழிவுகளான இயற்கையாக மக்காத கழிவுகளான இடிக்கப்பட்ட மற்றும் கட்டடக் கழிவுகள், வீட்டிற்குரிய அபாயகரமான கழிவுகள், மறுசுழற்சி செய்யமுடியாத இயக்க ஆற்றலற்ற கழிவுகள் மற்றும் சுகாதாரக் கழிவுகள் மற்றும் மறுசுழற்சி செய்யமுடியாத எரியக் கூடிய கழிவுகள் இயற்கையாக மக்கும் கழிவுகளான விவசாய மற்றும் பால்பொருள் கழிவுகள் ஆகியவற்றை வகைப்படுத்துதல் மற்றும் பிரித்தெடுத்து சேமித்தல் என்று பொருள்படும்.

45. ***“சேவை வழங்குவோர்”*** என்றால் பொதுப் பயன்பாட்டுச் சேவைகளான மின்சாரம், வடிகால், சாலைகள், தொலைபேசி, மின்சாரம், கழிவுநீர், நீர் போன்றவற்றை வழங்கும் ஓர் அதிகார மன்றம் என்று பொருள்படும்.

46. ***“திடக்கழிவு”*** என்பது திடக்கழிவு மற்றும் திடக்கழிவு அல்லாத வீட்டிற்குரிய கழிவு, சுகாதார கழிவு, வியாபாரக் கழிவு, நிறுவனம் சார்ந்த கழிவு, உணவகம் மற்றும் சந்தை கழிவு மற்றும் இதர குடியிருப்பில்லாக் கழிவுகள், சாலைக் கழிவுகள், மேற்பரப்பு வடிகாலிலிருந்து எடுக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட வண்டல்கள், தோட்டக் கழிவுகள் விவசாய மற்றும் பால்பொருள் கழிவுகள், உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் உள்ள பகுதிகளிலிருந்து உருவாக்கப்பட்ட தொழிலக கழிவு நீங்கலாக கதிரியக்கமுள்ள கழிவுகள், மின்கலக் கழிவுகள், கணினிக் கழிவுகள், சுத்திகரிக்கப்பட்ட உயிரி மருத்துவ கழிவுகள் மற்றும் விதி 2 இல் சொல்லப்பட்டுள்ள இதர கழிவுகள் என்று பொருள்படும்.

47. ***“வகைப்படுத்துதல்”*** என்பது மறுசுழற்சிக்கு ஏற்றவாறு கலவையான கழிவுகளிலிருந்து மறுசுழற்சிப் பொருள்களான காகிதம், பிளாஸ்டிக், அட்டைகள், உலோகங்கள், கண்ணாடி முதலியவற்றை மறுசுழற்சி செய்யத்தக்க பல்வேறு கூறுகள் மற்றும் வகைப்பாடுகளாக பிரித்தெடுத்தல் என்று பொருள்படும்.

48. ***“நிலைப்படுத்துதல்”*** என்பது மண் நிவாரணம், மண் அரிப்பு கட்டுப்பாடு மற்றும் விவசாய நிலத்திற்குப் பயன்படுகிற மற்றும் பாதிப்பு ஏற்படுத்தும் துர்நாற்றங்கள்

அல்லது திரவக்கசிவு ஏற்படுத்தாதவாறு நிலைப்படுத்தும் நிலைக்கு இயற்கையாக மக்கும் உயிரிக்கழிவுகளை, உயிரி முறையில் சிதைத்தல் என்று பொருள்படும்.

49. ***"தெரு வியாபாரி"*** என்பவர் பொருட்கள், சரக்குகள், விற்பனைப் பொருட்கள், தின் பண்டங்கள் அல்லது தினசரி பயன்பாட்டிற்கு உபயோகப்படும் பொருட்களை விற்பவர் அல்லது தற்காலிகமாக எழுப்பிய கட்டடங்களிலிருந்து இன்னபிற தனியார் பகுதி அல்லது பொது இடம் அல்லது பொது பூங்காக்கள், சாலையோரம், நடைபாதை ஓரங்கள், சந்துகள், தெருக்கள் ஆகிய இடங்களில் உள்ள பொது மக்களுக்கு சேவை செய்பவர் அல்லது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்ந்து சென்று கூவியும், தள்ளுவண்டி அல்லது அமர்ந்து கொண்டு உள்ளூர் அல்லது குறிப்பிட்ட வட்டாரங்களில் ஏனைய பிற அனைத்துப் பொருட்களை விற்பவர் என்று பொருள்படும். "தெரு வியாபாரம்" என்ற சொல் இலக்கண மாறுபாடுடைய வினையகச் செயற்படு பொருள் கொண்ட அதற்கேற்ப பொருள் கொள்ளப்படும் சொற்றொடர் ஆகும்.

50. ***"சிறு அன்பளிப்புக் கட்டணம்"*** என்பது கழிவுகளைக் கொட்டிப் புதைக்குமிடத்தில் எஞ்சிய திடக்கழிவுகளை அகற்றல் அல்லது கழிவு செய்முறை வசதியை இயக்குபவர் அல்லது சலுகையளிப்பவரிடம் செலுத்துவதற்காக மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட மாநில முகவாண்மை அல்லது உள்ளாட்சி மன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் அல்லது துணை விலை ஆகும்.

51. ***"மாற்று நிலையம்"*** என்பது சேகரிப்புப் பகுதிகளிலிருந்து திடக்கழிவுகளைப் பெறுவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு வசதி என்று பொருள்படும். இவை, அகற்றல் பணிகளுக்கு அல்லது கழிவு செய்முறைக்காக மூடிய வண்டிகள் அல்லது சரக்கு வண்டிகள் மூலம் அதிக அளவில் எடுத்துச் செல்லப்படும்.

52. ***"கொண்டு செல்லுதல்"*** துர்நாற்றம், துப்புரவற்றநிலை, மற்றும் காண சகிக்காத நிலை ஆகியவற்றைத் தடுக்கும் பொருட்டு சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு திடக்கழிவுகளை சுத்திகரித்து அல்லது ஓரளவு சுத்திகரித்து அல்லது சுத்திகரிக்காமல் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மற்றும் மூடியநிலையில் எடுத்துச்செல்லும் வகையில் திடக்கழிவுகளைக் கொண்டு செல்லுதல் என்று பொருள்படும்

53. ***"சுத்திகரிக்கும் முறை"*** என்பது தீங்கின் அளவு மற்றும் வாய்ப்பினைக் குறைக்க, கழிவுகளைச் சிதைத்தல் அல்லது இயற்பியல் வேதியியல் அல்லது உயிரி

தன்மையுடையவையாக மாற்றியமைத்தலுக்காக வடிவமைக்கப்பட்ட முறை, தொழில் நுட்பம் அல்லது செய்முறை என்று பொருள்படும்.

54. ***“பயன்பாட்டாளர் கட்டணம்”*** என்பது கழிவு உருவாக்குபவரிடம், சேகரித்தல் கொண்டு செல்லுதல், செய்முறைப்படுத்துதல் மற்றும் ஒருவகை செய்தலுக்காக உள்ளாட்சி மன்றம் மற்றம் விதி 2இல் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு நிறுவனத்தால் விதிக்கப்படும் கட்டணம் என்று பொருள்படும்.

55. ***“மண் புழு உரமாக்கல்”*** என்பது மண் புழுவைப் பயன்படுத்தி இயற்கையாக மக்கும் உயிரி கழிவுகளை உரமாக மாற்றும் செயல்முறை ஆகும்.

56. ***“கழிவு உருவாக்குபவர்”*** என்பது திடக்கழிவை உருவாக்கும் தனிநபர் அல்லது குழு, ஒவ்வொரு குடியிருப்பு வளாகங்கள், இந்திய ரயில்வே உட்பட்ட குடியிருப்பு அல்லாத நிறுவனங்கள், பாதுகாப்பு நிறுவனங்கள் ஆகியோர் என்று பொருள்படும்.

57. ***“கழிவு படிநிலை”*** என்பது திடக்கழிவினை கொட்டிப்புதைப்பதற்கு குறைந்த முக்கியத்துவம் அளித்தும், பாதுகாப்பிற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தும், அகற்றல், மீட்டெடுப்பு, மறுசுழற்சி, மறுபயன்பாடு, குறைத்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றை வலியுறுத்துவதன் மூலம் திடக்கழிவிற்கான முன்னுரிமை வரிசை நிரூபிக்கப்பட வேண்டும் என்று பொருள்படும்.

58. ***“கழிவு பொறுக்குபவர்”*** என்பது வாழ்வாதாரதிற்காக இடையீட்டாளர் மூலம் அல்லது நேரடியாக மறு சுழற்சியாளர்களிடம் விற்பனை செய்வதற்காக, கழிவு உருவாகிய இடமான சாலைகள், குப்பைத்தொட்டிகள் பொருள் மீட்கும் இடங்கள், செய்முறைப்படுத்தும் இடங்கள், ஒருவகை செய்யும் இடங்கள் ஆகியவற்றிலிருந்து மீண்டும் பயன்படுத்தத்தக்க மற்றும் மறுசுழற்சி செய்யத்தக்க திடக்கழிவுகளை சேகரிக்கிற மற்றும் மீட்கிற ஒரு நபர் அல்லது ஒரு குழுவைச் சேர்ந்த நபர் என்று பொருள்படும்.

(2) இங்கு பயன்படுத்தப்பட்டு (மாசுக் கட்டுப்பாட்டு), ஆனால் காற்று (பாதுகாப்பு மற்றும் மாசு கட்டுபாட்டுச்) சட்டம் 1981, நீர் (பாதுகாப்பு மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு) வரிச்சட்டம் 1977, நீர் (பாதுகாப்பு மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு ) வரிச்சட்டம் 1977, நீர் (பாதுகாப்பு மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு) சட்டம் 1974 மற்றும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 ஆகியவற்றில் சொற்பொருள் விளக்கம் அளிக்கப்படாத சொற்கள் மற்றும் தொடர்கள் அந்தச்சட்டத்தில் உள்ள அந்தந்த பொருளையே (அர்த்தம்) கொண்டிருக்கும்.

**4. கழிவு உருவாக்குபவரின் கடமைகள்**

**(1)** ஒவ்வொரு கழிவு உருவாக்குபவரும்,

(a) இயற்கையாக மக்கும் உயிரி கழிவுகள், இயற்கையாக மக்காத உயிரி கழிவுகள் மற்றும் வீட்டிற்குரிய அபாயகரமான கழிவுகள் என்று மூன்று வகையாகப் பிரித்தெடுத்து அதற்குரிய தொட்டிகளில் சேமித்து அவற்றை உள்ளாட்சி அமைப்புகளால் அவ்வப்போது அளிக்கப்படும் கட்டளை மற்றும் வெளியிடுகிற அறிவிக்கைகளில் உள்ளவாறு அனுமதியளிக்கப்பட கழிவு சேகரிப்பவர் மற்றும் கழிவு பொறுக்குபவரிடம் அவற்றை ஒப்படைக்க வேண்டும்.

(b) பயன்படுத்தப்பட்ட சுகாதார கழிவுகளான, அணையாடைகள், பெண்கள் பயன்படுத்தும் டயாபர்கள், சுகாதார பஞ்சுகள் ஆகியவை உள்ளாட்சி அமைப்புகளால் அறிவுறுத்தப்பட்டவாறு தகுந்த மறைபொருட்கள் அல்லது அந்தப்பொருளின் தர உரிமையாளரின் அல்லது தயாரிப்பாளர்கள் வழங்கிய சிறு பைகள் மூலம் பாதுகாப்பாக சுற்றப்பட்டிருக்க வேண்டும். மேலும் அதனை இயற்கையாக மக்காத உயிரிக்கழிவுகள் அல்லது உலர்ந்த கழிவுகளுக்கான தொட்டிகளில் இடவேண்டும்.

(c) அவ்வப்போது உருவாக்கப்பட்ட கட்டட மற்றும் இடிபாடுகள் கழிவுகளை அவரவர் இடத்திலேயே சேமித்து வைத்திருக்க வேண்டும் மற்றும் 2016 ஆம் ஆண்டு கட்டட மற்றும் இடிபாடுகள் கழிவு மேலாண்மை விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு அகற்ற வேண்டும்.

(d) ஒருவரால் உருவாக்கப்பட்ட பூந்தோட்டம் மற்றும் தோட்டக்கழிவுகளை அவ்வாறு உருவாக்கியவரின் இடத்திலேயே சேமித்து வைத்திருக்க வேண்டும் மற்றும் அவ்வப்போது அளிக்கிற உள்ளாட்சி அமைப்புகளின் அறிவுறுத்தலின்பேரில் அவற்றை அகற்ற வேண்டும்.

**(2)** எந்த ஒரு கழிவு உருவாக்குபவரும், நீர் நிலைகள் அல்லது வடிகால்கள் அல்லது பொதுவெளியிடம் அல்லது சாலைகளில் உருவாக்கிய கழிவை, புதைக்கவோ, எரிக்கவோ அல்லது தூக்கி எறியவோ கூடாது.

**(3)** அனைத்து கழிவு உருவாக்குபவரும் உள்ளாட்சி மன்றங்களின் துணை விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு, திடக்கழிவு மேலாண்மைக்கு அத்தகைய பயன்பாட்டு கட்டணத்தை செலுத்த வேண்டும்.

(4) எந்த ஒரு நபரும்,  உள்ளாட்சி மன்றத்திடம் குறைந்தது மூன்று தினங்களுக்கு முன்னர் தெரிவிக்காமல், நூறு நபர்களுக்கு மேல் கூட்டி எந்தவொரு உரிமமில்லாத இடத்திலும், எந்தவிதமான நிகழ்ச்சியோ, கூட்டமோ நடத்தக்கூடாது மற்றும் அந்த நபர் அல்லது அந்த நிகழ்ச்சியை நடத்துபவர் கழிவு உருவாக்கிய அந்த இடத்திலிருந்து கழிவினை பிரித்தெடுத்து உள்ளாட்சி அமைப்பால் குறிப்பிடப்பட்ட கழிவு சேகரிப்பவர் அல்லது முகவாண்மையிடம் அவற்றை ஒப்படைப்பு செய்ய வேண்டும்.

(5) ஒவ்வொரு தெரு வியாபாரியும் அவரவர் சம்பந்தமான கழிவுகளான பழங்கள், காய்கறிகள், மீதம் உள்ள உணவு, தேங்காய் சிரட்டைகள், உறைகள், கொள்கலன்கள், கோப்பைகள், தூக்கி எறியப்படும் தட்டுகள் மற்றும்  உணவு கழிவுகளை சேமிக்கும் வகையில் உரிய தொட்டிகள் வைத்திருக்க வேண்டும் மற்றும் அந்த கழிவுகளை உள்ளாட்சி அமைப்பால் அறிவிக்கை செய்யப்பட்ட கழிவு சேமிப்பு கிடங்குகள் அல்லது தொட்டிகள் அல்லது வாகனத்தில் கொட்ட வேண்டும்.

(6) அனைத்து குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் சந்தை சங்கத்தினர் இந்த விதிகள் வெளியிட்ட ஒரு ஆண்டிற்குள் உள்ளாட்சி அமைப்புடன் கூட்டாக இணைந்து இந்த விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு, கழிவுகள் உருவாக்கப்பட்ட இடத்தில் அவற்றைப்பிரித் தெடுக்கப்படுவதையும், பிரித்தெடுத்த கழிவுகள் தனித்தனியாக சேகரிக்கப்படுவதையும், மறு சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட கழிவு பொறுக்குபவர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறு சுழற்சியாளர்களிடம் ஒப்படைப்பு செய்யப்படுவதையும், உறுதி செய்ய வேண்டும். அந்த இயற்கையாக மக்கும் தன்மையுடைய உயிரிக்கழிவுகளை முடிந்தால் அந்த இடத்திலேயே செய்முறை மற்றும் கூட்டு உரமாக்கல் மூலம் ஒருவகை செய்யப்படும் அல்லது உயிரி–மீதேனாக்கம் செய்யப்பட வேண்டும். வண்டல் கழிவுகளை உள்ளாட்சி அமைப்புகளால் குறிப்பிடப்பட்ட கழிவு சேகரிப்பவர் அல்லது முகவாண்மையாளர்களிடம் அளித்திட வேண்டும்.

(7) 5,000 சதுரடிக்கு மேலுள்ள அனைத்து வாயில்களைக்கொண்ட சமுதாயங்கள் மற்றும் நிறுவனங்கள் இந்த விதிகள் வெளியிடப்பட்ட ஒரு ஆண்டிற்குள் உள்ளாட்சி அமைப்புடன் கூட்டாக இணைந்து, இந்த விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு, கழிவுகள் உருவாக்கப்பட்ட இடத்தில், கழிவுகள் பிரித்தெடுக்கப்படுவதையும், பிரித்தெடுத்த கழிவுகள் தனித்தனியாக சேகரிக்கப்படுவதையும் மறு சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட கழிவு பொறுக்குபவர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மறு சுழற்சியாளர்களிடம் ஒப்படைப்பு செய்யப்

படுவதையும் உறுதி செய்ய வேண்டும். அந்த இயற்கையாக மக்கும் தன்மையுடைய உயிரிய கழிவுகளை முடிந்தால் அந்த இடத்திலேயே செய்முறை மற்றும் கூட்டு உரமாக்கல் மூலம் ஒருவகை செய்யப்பட வேண்டும் அல்லது உயிரி–மீத்தேனாக்கம் செய்யப்பட வேண்டும். வண்டல் கழிவுகளை உள்ளாட்சி அமைப்புகளால் குறிப்பிடப்பட்ட கழிவு சேகரிப்பவர் அல்லது முகவாண்மையாளர்களிடம் அளித்திட வேண்டும்.

**(8)** அனைத்து உணவகங்கள் மற்றும் உணவு விடுதிகள் இந்த விதிகள் வெளியிடப்பட்ட ஒரு ஆண்டிற்குள் உள்ளாட்சி அமைப்புடன் கூட்டாக இணைந்து, இந்த விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகள் உருவாக்கப்பட்ட இடத்தில், கழிவுகள் பிரித்தெடுக்கப் படுவதையும், பிரித்தெடுத்த கழிவுகள் தனித்தனியாக சேகரிக்கப்படுவதையும் மறு சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட கழிவு பொறுக்குபவர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மறு சுழற்சியாளரிடம் ஒப்படைப்பு செய்யப்படுவதையும் அந்த இயற்கையாக மக்கும் தன்மையுடைய உயிரிய கழிவுகளை முடிந்தால் அந்த இடத்திலேயே செய்முறை மற்றும் கூட்டு உரமாக்கல் மூலம் ஒருவகை செய்யப்பட வேண்டும் அல்லது உயிரி–மீத்தேனாக்கம் செய்யப்பட வேண்டும். வண்டல் கழிவுகளை உள்ளாட்சி அமைப்புகளால் குறிப்பிடப்பட்ட கழிவு சேகரிப்பவர் அல்லது முகவாண்மையாளர்களிடம் அளித்திட வேண்டும்.

**5. சுற்றுச்சூழல், வனம் மற்றும் தட்ப வெட்ப மாற்றத்திற்கான அமைச்சகத்தின் கடமைகள்:**

**(1)** நமது நாட்டில் இந்த விதிகளை நடைமுறைப்படுத்துவதை கண்காணிக்கும் பொறுப்பு சுற்றுச்சூழல் வனம் மற்றும் தட்ப வெட்ப மாற்றத்திற்கான அமைச்சகத்திற்கு உரியதாகும். அந்த அமைச்சகம் சுற்றுச்சூழல், வனம் மற்றும் தட்ப வெட்ப மாற்றத்திற்கான அமைச்சகத்தின் செயலாளரின் தலைமையில் ஒரு மத்திய கண்காணிப்புக்குழுவை அமைத்திட வேண்டும். அந்த குழு கீழ் குறிப்பிட்டுள்ள அமைச்சகத்தில் இணைச்செயலாளர் அல்லது ஆலோசகர் பதவி தரத்திற்கு குறையாத அதிகாரியைக்கொண்டிருக்கும்.

1. நகர்ப்புர வளர்ச்சி அமைச்சகம்
2. ஊரக வளர்ச்சி அமைச்சகம்
3. இரசாயன உரம் மற்றும் உரங்கள் அமைச்சகம்
4. விவசாய அமைச்சகம்
5. மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம்

6. சுழற்சி முறையில் மூன்று மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்கள் அல்லது மாசுக்கட்டுப்பாட்டுக்குழுக்கள்

7. சுழற்சி முறையில் மாநில அரசின் மூன்று நகர்ப்புர வளர்ச்சித்துறைகள்

8. சுழற்சி முறையில் மாநில அரசின் மூன்று ஊரக வளர்ச்சித்துறைகள்

9. சுழற்சி முறையில் மூன்று நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள்

10. சுழற்சி முறையில் இரண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நகரங்கள்.

11. FICCI, CII

12. இந்த துறையைச்சேர்ந்த இரண்டு வல்லுநர்கள்

(2) இந்த விதிகளை நடைமுறைப்படுத்துவதை சீராய்வு செய்யவும், கண்காணிக்கவும், ஒரு ஆண்டில் ஒருமுறையாவது மத்திய கண்காணிப்புக்குழு கூட வேண்டும். அவசியம் ஏற்பட்டால் சுற்றுச்சூழல் வனம் மற்றும் தட்ப வெட்ப மாற்றத்திற்கான அமைச்சகம் பிற வல்லுநர்களை சேர்த்துக்கொள்ளலாம். இந்தக்குழு மூன்றாண்டுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படும்.

**6. நகர்ப்புர வளர்ச்சி அமைச்சகத்தின் கடமைகள்:**

நகர்ப்புர வளர்ச்சி அமைச்சகம், மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகத்துடன் கூட்டாகச் சேர்ந்து கீழ்கண்டவற்றை மேற்கொள்ளும்.

(a) திடக்கழிவு மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்த வெளிமுகவாண்மையாளர்கள் மற்றும் அமைச்சகத்தின் நிதியுதவியுடன் திடக்கழிவு மேலாண்மைத்திட்டங்களை ஆண்டுக்கு ஒருமுறையேனும் செயல்படுத்தல் மற்றும் சரி செய்யும் நடவடிக்கைகள் குறித்து உரிய ஆலோசனை வழங்குதல் ஆகியவற்றிற்காக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மாநிலங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை குறிப்பிட்ட காலந்தோறும் மறு ஆய்வு செய்யும்.

(b) இந்த விதிகளின் அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் பொறுப்பாளர்களுடன் கலந்தாலோசித்து கழிவிலிருந்து எரிசக்தி உற்பத்தி கொள்கை உட்பட திடக்கழிவு மேலாண்மை குறித்து தேசிய கொள்கை மற்றும் மேலாண்மை உத்தியினை வகுக்க வேண்டும்.

(c) தேசிய நகர்ப்புர சுகாதாரக்கொள்கை மற்றும் தேசிய திடக்கழிவு மேலாண்மை கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில், திடக்கழிவு மேலாண்மை குறித்த

மாநிலக்கொள்கை மற்றும் உற்பத்தியை உருவாக்குவதில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உதவ வேண்டும்.

(d) திடக்கழிவு மேலாண்மையில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிகளை ஊக்கப்படுத்துதலும் அந்தத்தகவல்களை மாநிலங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பரவச்செய்தலும்.

(e) முனைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி நகரங்கள் மற்றும் ஏனைய பொறுப்பாளர்கள் ஆகியோர்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் திறன் உருவாக்கம் செய்தல்.

(f) திடக்கழிவு மேலாண்மையின் நேர அளவு மற்றும் தரங்களை நிறைவு செய்ய உள்ளாட்சி மன்றங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களுக்கு உரிய தொழில் நுட்ப வழிகாட்டிக்குறிப்புகள் அளிக்க வேண்டும் மற்றும் திட்ட நிதி ஒதுக்க வேண்டும்.

**7. இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகம், உரத்துறையின் கடமைகள்:**

உரத்துறை, உரிய தக்க அமைப்புகள் மூலம்,

(a) மாநகர கலப்பு உர விற்பனையை அதிகரிக்கச் செய்ய உதவி புரிய வேண்டும்.

(b) தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்ய கலப்பு உரங்கள் கிடைக்கும் அளவிற்கு உரத்தொழிற்சாலைகள் 6 முதல் 7 பைகள் மற்றும் 3 முதல் 4 பைகள் என்ற விகிதாச்சார அடிப்படையில் இரசாயன உரங்கள் அடங்கிய கலப்பு உரத்தின் இணை விற்பனையை மேம்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

**8. மத்திய விவசாய அமைச்சகத்தின் கடமைகள்:**

விவசாய அமைச்சகம் உரிய அமைப்புகள் மூலம் கீழ்கண்டவற்றுக்கு வகை செய்ய வேண்டும் :

(a) கலப்பு உரத்தை உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும், உரக்கட்டுப்பாட்டு ஆணையில் நெகிழ்வான தன்மையை ஏற்படுத்திட வேண்டும்.

(b) பண்ணை நிலங்களில் கலப்பு உரத்தை பயன்படுத்துவதை பரவச்செய்ய வேண்டும்.

(c) உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவாண்மையாளர்கள் தயாரித்த கலப்பு உரத்தின் தரத்தை சோதனை செய்ய, சோதனைக்கூடங்களை அமைத்திட வேண்டும்.

(d) பண்ணை நிலங்களில் கலப்பு உரத்தை பயன்படுத்தும் பொழுது கலப்பு உரம் மற்றும் இரசாயன உரங்களை பயன்படுத்தும் விகிதாச்சாரம் மற்றும் கலப்பு உரத்தின் தரத்தை தொடர்ந்து பராமரித்தல் ஆகியவற்றிற்கான உரிய வழிகாட்டிக்குறிப்புகளை வழங்க வேண்டும்.

**9. மின்சார அமைச்சகத்தின் கடமைகள்:**

மின்சார அமைச்சகம் உரிய தக்க செயல்முறைகள் மூலம்,

(a) திடக்கழிவு மூலம் கழிவிலிருந்து ஆற்றல் இயந்திரகத்தால் தயாரிக்கப்பட்ட மின்சாரத்திற்கு தக்க விலை மற்றும் கட்டணம் நிர்ணயிக்க வேண்டும்.

(b) கழிவிலிருந்து ஆற்றல் இயந்திரகத்தால் தயாரிக்கப்பட்ட மின்சாரத்தை விற்பனை நிலையங்கள் கண்டிப்பாக வாங்கிட வழிவகை செய்ய வேண்டும்.

**10. புதுமை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் கடமைகள்:**

புதுமை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் உரிய தக்க செயல்முறைகள் மூலம்

(a) கழிவிலிருந்து எரிசக்தி இயந்திரகங்கள் உருவாக்கும் வகையில் உரிய உட்கட்டமைப்பு செய்திட வேண்டும் மற்றும்

(b) அந்த கழிவிலிருந்து எரிசக்தி இயந்திரகத்திற்கு உரிய உதவித்தொகை அல்லது மானியம் வழங்கிட வேண்டும்.

**11. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நகர்புர வளர்ச்சித் துறை செயலாளரின் கடமைகள்:**

மாநில அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின் நகர்ப்புர வளர்ச்சித்துறையின் செயலாளர் அவர்கள் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அல்லது இயக்குநர் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் இயக்குநர் மூலமாக பின்வருவனவற்றை மேற்கொள்வார்:

(a) இந்த விதிகள் அறிவிக்கை வெளியிட்ட ஒருவருட காலத்திற்கு மிகாமல் நகர்ப்புர வளர்ச்சி அமைச்சகத்தின் தேசிய நகர சுகாதார கொள்கை மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்த தேசியக்கொள்கை, இந்த விதிகளுக்கு உட்பட்டு கழிவு மேலாண்மைத்துறையில் பணிபுரியும் கழிவு பொறுக்குபவர்கள், சுயஉதவிக்குழுக்கள் மற்றும் ஒத்தக்குழுக்களிலிருந்து பிரதிநிதி அடங்கிய முனைப்பாளர்களின் ஆலோசனை அடிப்படையில் மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு திடக்கழிவு மேலாண்மை உத்தி குறித்த மாநில கொள்கையை தயார் செய்ய வேண்டும்.

(b) மாநில கொள்கைகள் மற்றும் மேலாண்மைத்திறனை வகுக்கும்போது, மறுபயன்பாடு, மறு சுழற்சி, மீட்டெடுத்தல் மற்றும் மிகவும் சாதகமாக நிலையில் பயன்படுத்தப்படும் திடக்கழிவின் பலவகை பொருட்கள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் தரும் வகையில் திடக்கழிவு மேலாண்மை குறித்த சுற்றுச்சூழல் மற்றும் மனித சுகாதாரத்திற்கு திடக்கழிவின் நிலப்பரப்புகளில் தாக்கத்தை குறைக்கவும் மற்றும் சிறிய அளவே கழிவுகள் செல்லும் பொருட்டு கழிவு குறைப்பதை உறுதி செய்யவும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

(c) மாநில கொள்கைகள் மற்றும் உத்திகள் கழிவினை குறைக்கும் மறுசுழற்சி தொழிற்சாலைகள் மற்றும் முறை சாரா கழிவு சேகரிப்பவர்கள், கழிவு பொறுக்குபவர்கள் அளிக்கும் முதன்மை பங்கினை அங்கீகரிக்க வேண்டும் மற்றும் கழிவு மேலாண்மை அமைப்பில் முறை சாரா கழிவு சேகரிப்பவர்கள் கழிவு பொறுக்குபவர்கள் ஒன்றிணைக்க விரிவான வழிமுறைகளுக்கு வகை செய்யும்.

(d) உள்ளாட்சி அதிகாரிகள் இந்த விதிகளின் வழிவகைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

(e) வட்டார சுகாதார கழிவு புதைக்குமிடம் அல்லது பொதுக்கழிவு செயல்முறை திறன்களில் உறுப்பினர்களாக உள்ள நகரங்களைத்தவிர திடக்கழிவு செய்முறை மற்றும் அகற்றல் வசதிகள் ஏற்படுத்திட அந்தந்த மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள ஒவ்வொரு நகரங்களில் அமைக்க நகர்ப்புர திட்டத்துறை செயல்திட்டம் வகுக்க வேண்டும்.

(f) ஓராண்டு காலத்திற்குள் திடக்கழிவுகளை அகற்றுவதற்கும், செய்முறைப்படுத்துவதற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தக்க நிலம் அடையாளம்

காணப்பட்டு ஒதுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் மற்றும் அதனை மாநிலம் அல்லது அதற்கேற்றவாறு நகர மற்றும் புறநகர வனத்துறை  அல்லது வட்ட வளர்ச்சிக்குழு மற்றும் மாநகரங்கள் வாயிலாக நகரங்களில் செயல்திட்டங்களை (நிலப்பயன்பாடு திட்டம்) செயல்படுத்த வேண்டும்.

(h) 5000 சதுரமீட்டருக்கு மேல்பட்ட மனைப்பகுதி மற்றும் 200 வீடுகளுக்கு மேலான இன்னபிற குடியிருப்பு சாராத வளாகம் அல்லது வளர்ச்சித்திட்டத்தில் வியாபார இடங்கள் அல்லது அடுக்குமாடி குடியிருப்புகளின் திடக்கழிவுகளை பிரித்தெடுத்தல், சேமித்தல், மைய செய்முறைக்கான தனிப்பட்ட இடத்தை எல்லை வரையறுக்க மாநிலத்திலுள்ள நகர திட்ட வளர்ச்சித்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.

(i) மறுசுழற்சி மற்றும் மீட்டெடுத்தல் வசதிக்காக கூடாரங்கள் அல்லது குறைந்தது ஐந்து மனைகள் அல்லது மொத்த மனையின் பரப்பளவில் குறைந்தது 5 விழுக்காடு மனையையாவது தொழிற் பூங்காக்கள், தொழிற் பேட்டைகள் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலங்களின் மேம்பாட்டை வளர்க்க, ஒதுக்க அறிவுறுத்த வேண்டும்.

(j) செலவுத்தொகையை பங்கீட்டு அடிப்படையில் வட்டார திறனிலிருந்து 50 கி.மீ (அல்லது அதிகமான) தொலைவிற்குள் அமைந்துள்ள நகரம் மற்றும் புற நகரங்களுக்காக பொது வட்டார கழிவு புதைக்குமிடத்தை அமைக்க வழிவகை செய்ய வேண்டும் மற்றும் அத்தகைய கழிவு புதைக்குமிடங்களில் தொழில் மேலாண்மையை உறுதி செய்ய வேண்டும்.

(k) கழிவு உருவாகும் இடத்திலேயே கழிவுகளை பிரித்தெடுத்தல் மற்றும் எடுத்துச்செல்லுதல் அல்லது செயல்முறையாக்கம் மற்றும் திடக்கழிவினை நிருவகிக்க உள்ளாட்சி அமைப்புகளின் திறனை மேம்படுத்த வேண்டும்.

(l) மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்துடன் கலந்தாலோசித்து ஒரு நாளைக்கு ஐந்து டன்களுக்கு மேல் திடக்கழிவு செய்முறை மற்றும் ஒருவகை செய்யும் வசதிகளுக்கு இடைத்தாங்கு மண்டலங்களை அறிவிக்க வேண்டும்.

(m) கழிவு பொறுக்குபவர்கள் மற்றும் கழிவு வணிகம் செய்பவர்களை பதிவு செய்வதற்கு ஒரு திட்டத்தை தயார் செய்ய வேண்டும்.

**12. மாவட்ட மாஜிஸ்திரேட்டு அல்லது மாவட்ட ஆட்சியர் அல்லது துணை ஆணையாளர் ஆகியோரின் கடமைகள்:**

மாவட்ட மாஜிஸ்திரேட் அல்லது மாவட்ட ஆட்சியர் அல்லது நேர்விற்கேற்ப துணை ஆணையாளர்

(a) விதி **11** துணை விதி (F)-1 உள்ளவாறு இந்த அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் மாநில நகர்ப்புர வளர்ச்சித்துறை பொறுப்பு செயலாளரின் துணையோடு அவருடைய மாவட்டத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் திடக்கழிவு செய்முறை மற்றும் ஒரு வகை செய்வதற்கான வசதிகளை அமைக்கும் வகையில் தகுந்த நிலங்களை அடையாளம் கண்டு ஒதுக்க வேண்டும்.

(b) பொறுப்பிலுள்ள மாநில நகர்ப்புர வளர்ச்சித்துறை செயலாளர் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் இயக்குநர் அல்லது நகராட்சி நிர்வாகத்துறை இயக்குநர் அல்லது ஆணையாளரின் ஆலோசனையின் பெயரில் கழிவு பிரித்தெடுத்தல், செய்முறை, கையாளும் முறை மற்றும் அகற்றல் ஆகியவைகள் குறித்த உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறன் குறித்து மூன்று மாதத்திற்கு ஒருமுறையாவது சீராய்வு செய்து சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**13. மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள ஊரக வளர்ச்சித்துறை அல்லது கிராம ஊராட்சி செயலாளரின் கடமைகள்:**

**1.** அதிகார வரம்பு மற்றும் இந்த விதிகளின் கீழ் உள்ள பகுதிகளில் மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நகரப்புற வளர்ச்சி செயலாளர்களுக்கான கடமைகள், மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள ஊரக வளர்ச்சித்துறை அல்லது கிராம பஞ்சாயத்து செயலாளருக்கும் பொருந்தும்.

**14. மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் கடமைகள்:**

மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்

(a) உள்ளாட்சி அமைப்புகள் வரையறுத்துள்ள தரங்களை பின்பற்றியும் இந்த விதிகளை நடைமுறைப்படுத்தவும், மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுக்குழு ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

(b) அனைத்து திடக்கழிவு செயல்முறைகளை பொறுத்தவரையில், நிலத்தடி நீர், காற்று, ஒளி, ஒளி மாசு மற்றும் லீசேட்ஸின் தரங்களை வகுக்க வேண்டும்.

(c) கையாளும் முறைக்கான நுட்பம் அல்லது திடக்கழிவு செய்முறை இடத்திற்கான சுற்றுச்சூழல் தரம் மற்றும் உரு மாதிரிகளை சீராய்வு செய்து அவ்வப்போது அவற்றினை மேம்படுத்திட வேண்டும்.

(d) கையாளும் முறைக்கான நுட்பம் அல்லது திடக்கழிவு செய்முறை இடங்களில் வரையறுக்கப்பட்ட சுற்றுச்சூழல் தரங்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாசு கட்டுப்பாட்டுக்குழுவின் மூலம் ஆண்டுக்கு ஒருமுறையாவது சீராய்வு செய்து கண்காணிக்கப்பட்ட தரவுகளை தொகுத்திட வேண்டும்.

(e) திடக்கழிவினை கையாளுதல், மறுசுழற்சி மற்றும் செயல்முறைக்கு புதுமையான நுட்பங்களை பயன்படுத்துவது சம்பந்தமான மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுக்குழுவின் கருத்துக்களை சீராய்வு செய்து அதனை ஆறு மாத காலத்திற்குள் குறித்துக்கொடுத்த சுற்றுச்சூழல் தரங்கள் மற்றும் உமிழ்வு வரையறைகளை வகுக்க வேண்டும்.

(f) இந்த விதிகளை உள்ளாட்சி அமைப்புகள் நடைமுறைப்படுத்துவது குறித்து மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாசு கட்டுப்பாட்டுக்குழு மூலம் கண்காணிக்கப்பட வேண்டும்.

(g) மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியங்கள் மற்றும் குழுக்கள் இந்த விதிகளை நடைமுறைப்படுத்துவது குறித்து அனுப்பிய அறிக்கைகள் பெற்று அதனடிப்படையில் ஆண்டறிக்கையை தயார் செய்து அதனை சுற்றுச்சூழல், வனம் மற்றும் வானிலை மாற்றத்திற்கான அமைச்சகத்திடம் அளிக்க வேண்டும் மற்றும் இதனை பொது இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

(h) வெளி எல்லையிலிருந்து ஒரு நாளைக்கு ஐந்து டன் எடைக்கு மேல் திடக்கழிவு திறங்களை, பல்வேறு விதமான அளவுகளில் கையாளுகின்ற, கழிவு செய்முறை மற்றும் ஒருவகை கழிவுசெய்யும் கூடங்களின் வெளி எல்லையிலிருந்த குடியிருப்பு, வணிகம் மற்றும் இன்னபிற கட்டுமான பணிகளை தடுக்கின்ற வகையில் இடைத்தாங்கு மண்டலங்களை தொடர்ந்து செயலாற்றுவதற்குண்டான வழிகாட்டுதல்கள் வெளியிட வேண்டும்.

(i) உள்ளாட்சி அமைப்புகள் சுற்றுச்சூழல் பார்வையில் திடக்கழிவினை அகற்றல் ஒருவகை செய்தல் மற்றும் செய்முறைகளை, இந்த விதிகளில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பின்பற்றுவதற்கு அவ்வப்போது வழிகாட்டுதல்கள் வெளியிடவேண்டும்.

(j) மாநிலங்களுக்குள் கழிவினை எடுத்துசெல்வதற்கான அறிவுரைகளை மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு வழங்க வேண்டும்.

**15. நகர திரள்கள், கணக்கெடுப்பு நகரங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் அதிகார மன்றங்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகள்:**

(a) மாநில கொள்கை மற்றும் உத்தி அறிவிக்கை வெளியிட்ட ஆறு மாத காலத்திற்குள், திடக் கழிவு மேலாண்மை திட்டத்தை தயார்செய்திட வேண்டும். அதன் நகலை மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்கள் அல்லது மாநில அரசுத் துறை அல்லது யூனியன் பிரதேசம் அங்கீகரிக்கப்பட்ட முகவரமைப்புக்கு அளிக்க வேண்டும்.

(b) குடிசைப்பகுதி மற்றும் முறைசாரா வீடுகள், வணிக வளாகங்கள், நிறுவனங்கள் மற்றும் ஏனைய குடியிருப்பு இல்லாத பகுதிகள் உள்ளிட்டவைகளிலிருந்து பிரிக்கப்பட்ட திடக் கழிவினை வீடுவீடாக சென்று சேகரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அடுக்குமாடி கட்டடங்கள், பெரிய வணிக வளாகங்கள், கடைகள், குடியிருப்பு வளாகங்களில் உள்ள நுழைவு வாயிலிலிருந்து அல்லது இன்னபிற நிர்ணயிக்கப்பட்ட இடங்களிலிருந்து சேகரிக்கவேண்டும்.

(c) முறைசாரா கழிவு சேகரிப்பவர்கள் அல்லது கழிவு பொறுக்குபவர்களின் அமைப்புகளுக்கு அங்கீகாரம் அளிக்க ஒரு ஒழுங்கமைப்பை ஏற்படுத்திட வேண்டும் மற்றும் வீடுவீடாக சென்று கழிவுகளை சேகரிப்பதற்கான பங்களிப்பை ஊக்குவிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவர்கள் அல்லது கழிவு பொறுக்குபவர்களை மேம்படுத்துவதற்கும் ஒன்றிணைக்கவும் ஒரு ஒழுங்கமைப்பை ஏற்படுத்திட வேண்டும்.

d) சுய சேவை குழுக்களை அமைத்து அவர்களுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும். அதன்பிறகு வீடுவீடாக சென்று கழிவுகளை சேகரிப்பது உள்ளிட்ட திடக் கழிவு மேலாண்மையினை ஒன்றிணைக்க ஊக்குவிக்க வேண்டும்.

(e) இந்த விதிகளின் அறிவிக்கை வெளியிட்ட ஒரு வருட காலத்திற்குள் இந்த விதிகளில் உள்ள நிபந்தனைகளை உள்ளடக்கிய துணை விதிகளை ஒருங்கிணைத்து அதனை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

(f) அவ்வப்போது, முறையான பயன்பாட்டு கட்டணத்தை தீர்மானித்து, அந்த கட்டணத்தை அவர்களாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவரமைப்பு வாயிலாக கழிவு உருவாக்குபவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

(g) கழிவுகளை உருவாக்குபவர்கள் நேரடியாக காகிதம், தண்ணீர் பாட்டில்கள், சாராய பாட்டில்கள், குளிர்பான கேன்கள், அட்டை பெட்டிகள், பழத்தோல்கள், உறைகள் ஆகிய கழிவுகளை கொட்டவோ அல்லது தூக்கியெறியவோ அல்லது நீர்நிலைகள், வடிகால்கள், பொது வெளியிடங்கள், தெருக்களில் கழிவுகளை எரிக்கவோ மற்றும் புதைக்கவோ கூடாது. இந்த விதிகளில் உள்ள நிபந்தனைக்களில் குறிப்பிட்டுள்ளவாறு தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை உள்ளாட்சி அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவர்கள் அல்லது கழிவு பொறுக்குபவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

(h) கழிவுகளிலிருந்து மறுசுழற்சி பொருள்களை முறைசாரா அல்லது அங்கீகரிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவர்கள் மற்றும் கழிவு பொறுக்குபவர்களுக்கு மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை பிரித்தெடுக்க போதுமான இடைவெளி கொண்ட இரண்டாம் நிலை சேமிப்பு வசதிகள் அல்லது பொருள் மீட்பு வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். ஜவுளி, உலோகம், கண்ணாடி, காகிதம், பிளாஸ்டிக் ஆகிய பிரிக்கப்பட்ட மறுசுழற்சி கழிவுகளை ஆதார இடத்திலேயே சேகரிப்பதற்கு கழிவு பொறுக்குப்பவர்கள் மற்றும்

மறுசுழற்சியாளர்களுக்கு சுலபமான வழிவகைகள் செய்துகொடுக்கவேண்டும். மக்கும் கழிவுகளை சேமிக்கும் தொட்டிக்கு பச்சை நிறமும், மறுசுழற்சி கழிவுகளை சேமிக்கும் தொட்டிக்கு வெள்ளை நிறமும், இன்னபிற கழிவுகளை சேமிக்கும் தொட்டிக்கு கருப்பு நிறமும் அடிக்கவேண்டும்.

(i) உள்ளூர் அபாயகரமான கழிவுகளை கொட்டுவதற்கு கழிவு படிவு மையங்களை அமைக்க வேண்டும் மற்றும் பாதுகாப்பாக அகற்றுவதற்காக உள்ளூர் அபாயகரமான கழிவுகளை இந்த அமையங்களில் கொட்டுவதற்கு கழிவு உருவாக்குபவர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கவேண்டும். அந்த இடங்களை நகரம் மற்றும் புற நகரங்களில் அதாவது, இருபது சதுர மீட்டர்கள் அடங்கிய பகுதிக்கு ஒரு மையம் அல்லது பகுதியாக அமைக்க வேண்டும். அந்த மையங்களில் அபாயகரமான கழிவுகள் பெறப்படும் நேரத்தினை அறிவிக்க வேண்டும்.

(j) மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசுக் கட்டுப்பாட்டுக்குழுவின் அறிவுறுத்தலின் பேரில், அபாயகரமான கழிவினை பாதுகாப்பாக வைத்திருந்து ஒருவகை செய்யும் இடத்திற்கு எடுத்துச்செல்லப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

(k) சாலையை பெருக்கி சேகரிக்கப்பட்ட மர இலைகளை எரிக்கக் கூடாது என சாலை பெருக்குபவர்களுக்க அறிவுறுத்த வேண்டும் அதனை தனியாக சேமித்து மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்ட முகமையிடம் அல்லது கழிவு சேகரிப்பவர்களிடம் ஒப்படைக்கவேண்டும்.

(l) கழிவு சேகரிப்பவர்கள் மற்றும் கழிவு பொறுக்குபவர்களுக்கு திடக் கழிவு மேலாண்மை குறித்த பயிற்சி அளிக்கவேண்டும்.

(m) தினந்தோறும் காய்கறி, பழம், பூ, இறைச்சி, கோழி மற்றும் மீன் சந்தைகளிலிருந்து கழிவுகளை சேகரிக்கவேண்டும். சுகாதாரமான சூழ்நிலைகள்

உருவாகும் வகையில் அந்த பகுதிகளில் உள்ள சந்தைகளில் மற்றும் அதனருகாமையில் பரவலாக்கப்பட்ட கலப்பு உர தளவாடம் அல்லது பயோ–மீத்தேன் தளவாடம் அமைக்க வேண்டும்.

(n) உள்ளக நிலைமை மற்றும் வணிக செயல்பாடு, மக்களின் அடர்த்தியைப் பொறுத்து வாரத்திற்கு இரண்டு முறை அல்லது ஒரு நாள் விட்டு ஒரு நாள் அல்லது தினந்தோறும் உப–சந்துக்கள், சந்துக்கள் மற்றும் சாலைகளில் கூட்டிய கழிவுகளை தனித்தனியாக சேகரிக்கவேண்டும்.

(o) தற்காலிக சேமிப்பு சாலை குப்பைகள் மற்றும் மேற்பரப்பு வடிகால்களிலிருந்து நீக்கப்பட்ட வண்டல்களை போக்குவரத்து வாகனத்தில் நேரடியாக சேகரிக்க முடியாத நிலையில் இருந்தால், அவற்றிற்கு மூடியிடும் வகையில் இரண்டாம் நிலை சேகரிப்பு வசதிகளை உருவாக்கவேண்டும். இத்தகைய கழிவுகள் உள்ளாட்சி அமைப்புகளினால் குறிப்பிட்ட கால இடைவெளியில் சேகரிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

(p) முடிந்தவரை தோட்டக்கலை, தோட்டங்கள் மற்றும் பூங்கா கழிவுகளை தனித்தனியாக சேகரித்து, அதனை தோட்டம் மற்றும் பூங்காக்களில் செயல்முறைப்படுத்த வேண்டும்.

(q) பிரிக்கப்பட்ட மக்கும் கழிவுகளை இருப்பு வைக்கும் இடங்களான கலப்பு உர இயந்திரகம், உயிரி மீத்தேனாக்க இயந்திரகம் அல்லது ஏதாவது ஒரு இடத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும். இவ்வகைக் கழிவுகளுக்கு ஆங்காங்கே செல்முறைப்படுத்துதலுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

(r) மக்காத கழிவுகளை அந்தந்த இருப்புவைக்கும் இடம் அல்லது பொருள் மீட்பு இடங்கள் அல்லது இரண்டாம் நிலை இடங்களுக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

(s) 2016–ஆம் ஆண்டு கட்டட மற்றம் இடிபாட்டு கழிவுகள் மேலாண்மை விதிகள் குறிப்பிட்டுள்ளவாறு கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை எடுத்துச் செல்லவேண்டும்.

(t) இருப்பு வைக்கும் இடங்களைச் சுற்றி சுகாதார சூழ்நிலைகள் மற்றும் துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு கழிவினை செய்முறைப்படுத்தவும், சாண எரிவாயு, வீட்டுக்கலப்பு உரங்களை மேம்படுத்தவும் மற்றும் கழிவு மேலாண்மைக்கு சமூகங்களை ஈடுபடுத்தவேண்டும்.

(u) இரசாயன உரங்களை இரண்டாண்டுகளில் பயன்படுத்துமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் அனைத்து பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள், அதன் அதிகாரத்தின் கீழுள்ள ஏனைய இடங்களில் முடிந்தவரை கலப்பு உரத்தைப் பயன்படுத்திடவேண்டும். முறைசாரா கழிவு மறுசுழற்சி செய்பவர்கள், மறுசுழற்சி முன்னேற்பாடுகள் செய்வதற்கு தக்க ஊக்கத் தொகைகள் அளிக்கப்பட வேண்டும்.

(v) மத்திய மாசுக்கட்டுபாட்டு வாரியம் வரையறுத்த தரங்களுக்கேற்றவாறும், அவ்வப்போது நகர்புர வளர்ச்சி அமைச்சகம் வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படியும் கீழ்க்குறிப்பிட்டுள்ள நுட்பங்களையும் சேர்த்து அவர்களாக அல்லது தனியார் துறை பங்களிப்புடன் அல்லது முகவரமைப்பு வாயிலாக திடக்கழிவின் மூலம் பெறப்பட்ட பலவிதமான பொருள்களைக் குறைந்த அளவில் பயன்படுத்துவதற்கேற்றவாறு தக்க நுட்பங்களைப்பயன்படுத்தும் வகையில் திடக் கழிவு இருப்பு வைக்கும் இடங்கள் மற்றம் அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்புகளைப் பராமரிக்கவும், இயக்கவும், கட்டுமான வசதிகளுக்கு வகை செய்யப்படவேண்டும். கீழ்க்குறிப்பிட்டிருக்கும் சுற்றுச்சுழல் தாக்கம் மற்றும் போக்குவரத்து செலவினைக் குறைக்கும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்ட செய்முறைக்கு தக்க முன்னுரிமை வழங்கவேண்டும்:–

(a) உயிர் மீத்தேன் ஆக்குதல், நுண்ணுயிர்க்கலப்பு உரமாக்கல், புழு கலப்பு உரமாக்கல், காற்று புகா செரிமானம் அல்லது மக்கும் கழிவுகளை உயிரி நிலைப்படுத்தலுக்கான ஏனைய யாதொரு செய்முறைப்படுத்துதல்.

(b) திடக் கழிவு சார்ந்த மின் உற்பத்தி நிலையங்கள் அல்லது சிமென்ட் உலைகளுக்கு மூலப் பொருள் வழங்கவும் அல்லது கழிவினை எரிப்பதற்கு கழிவிலிருந்து பெறப்படும் எரிபொருள் உட்பட எரிசக்தி செய்முறைப்படுத்துதல்.

(w) இந்த விதிகளில் வரையறுக்கப்படட முறையின்படி அட்டவணை—1இல் குறிப்பிட்டுள்ள வண்டல் கழிவுகளை அகற்ற அவர்களாக அல்லது ஏனைய யாதொரு முகவரமைப்பு வாயிலாக சுகாதார கழிவுகள் புதைக்கப்பட்ட நிலம் மற்றும் அது தொடர்புடைய உட்கட்டமைப்பைப் பராமரிக்கவும், இயக்கவும் மற்றும் கட்டுமானம் செய்திடவும் வேண்டும்.

(x) ஆண்டறிக்கையில் மூலதன முதலீட்டிற்கும் திடக்கழிவு மேலாண்மை சேவைக்கும் தேவையான நிதி ஒதுக்கம் பொருட்டு வழி வகைகள் செய்யவேண்டும். இந்த விதிகளுக்குட்பட்டு உள்ளாட்சி அமைப்புகளின் ஏனைய கடமையான செயல்பாடுகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கு ஏற்றவாறு தேவையான நிதியை ஒதுக்கிய பின்னரே உள்ளாட்சி அமைப்புகள் அதன் தன்னிச்சையான செயல்பாடுகளுக்கான நிதியை ஒதுக்கவேண்டும்.

(y) அந்தந்த இடத்திற்கேற்றவாறு மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாசு கட்டுப்பாட்டுக் குழுவிடமிருந்து ஒரு நாளைக்கு ஐந்து மெட்ரிக் டன் கழிவு பருமனுக்கு மேல் உள்ள சுகாதார கழிவுகள் புதைக்கப்பட்ட நிலம் கழிவு செயல்முறை, கையாளும் முறை அல்லது அகற்றல் வசதிகளைக் கட்டமைப்பதற்கான அங்கீகாரம் பெற படிவம் 1இல் உள்ளவாறு விண்ணப்பம் அளிக்கவேண்டும்.

(z) அங்கீகாரம் காலாவதியாவதற்கு குறைந்தது அறுபது நாளைக்கு முன்னராவது அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(za) நியமிக்கப்பட்ட அதிகாரி அல்லது நகராட்சி நிருவாக இயக்குநர் அல்லது ஆணையாளரிடம் வரும் ஆண்டின் ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் படிவம்–IVஇல் உள்ளவாறு ஆண்டறிக்கை தயார் செய்து அளிக்க வேண்டும்.

(zb) ஒவ்வொரு ஆண்டின் மே மாதம் 31 ஆம் தேதிக்குள் அந்தந்த மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசுக்கட்டுப்பாட்டுக் குழு மற்றும் ஊரக வளர்ச்சி துறை அல்லது கிராம ஊராட்சி அல்லது மாநில நகர்ப்புற வளர்ச்சித் துறையின் பொறுப்பு செயலாளருக்கு ஆண்டறிக்கையை அனுப்பி வைக்கவேண்டும்.

(zc) பிரிக்கப்பட்ட கழிவுகளை வீடு வீடாக சேகரிப்பதற்கும் அகற்றல் வசதி அல்லது செய்முறைக்கு கலப்பற்ற கழிவுகளை முதல் மற்றும் இரண்டாம் நிலை எடுத்துச்செல்வதற்கும் பணியாளர்களாகிய ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கவேண்டும்.

(zd) திடக்கழிவினை கையாளும் அனைத்துப் பணியாளர்களுக்கும் சொந்த பாதுகாப்பு உபகரணங்களான சீருடை, ஒளிவரும் கோட்டுகள், கையுறைகள், மழைக்கோட்டுகள், உரிய காலணிகள் மற்றும் முகமூடிகள் வழங்க வேண்டும். அவைகளை வேலை நிமித்தமாக பயன்படுத்தும் வகையில் இயக்குபவர் பார்த்துக்கொள்ளவேண்டும்.

(ze) சந்தை வளாகங்கள் மற்றும் குழு வீட்டு சமூகங்கள் அளிக்கும் கட்டிட வரைபடத்திற்கு அங்கீகாரம் அளிக்கும்போது அந்தக்கட்டிடத்தில் பிரிக்கப்பட்ட கழிவுகளை சேமிப்பதற்கும் கழிவுகளை பிரிப்பதற்கும், சேகரிப்பதற்கும் உரிய மையங்கள் அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதை உறுதி செய்திட வேண்டும்.

(zf) பின்பற்ற தவறுகிறவர்கள், குப்பை போடுபவர்களுக்கு உடனடி அபராதம் விதிக்கும் வகையில் தகுந்த நெறிமுறைகள் மற்றும் துணை விதிகள் வகுத்திட வேண்டும். வகுக்கப்பட்ட துணை விதிகளின்படி உடனடி அபராதம் விதிப்பதற்கு உள்ளாட்சி அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் மற்றும்

(zg) தொடர்பாடல் பிரச்சாரம், கல்வி மற்றும் தகவல் தொடர்பு மூலமாக பொது விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். கழிவு உருவாக்குபவர்களுக்கு கீழ்குறிப்பிட்டுள்ளவாறு தகுந்த பயிற்சி அளிக்க வேண்டும். அதாவது

(i) குப்பை போடாதது;

(ii) கழிவு உருவாக்குவதைக் குறைப்பது;

(iii) முடிந்தவரை கழிவு மறுபயன்படுத்தல்;

(iv) மூலத்திலேயே கழிவு உருவாகும் இடத்திலேயே உள்ளூர் அபாயகரமான கழிவுகள் மற்றும் சுகாதார கழிவுகள், மக்கும் கழிவுகள், மக்காத (மறுசுழற்சி மற்றும் எளிதில் தீப்பற்றக்கூடிய கழிவுகள்) கழிவுகள் என பிரிப்பதற்கு பயிற்சி கொடுத்தல்.

(v) வீட்டு உரமாக்கல், மண்புழு உரத்தயாரிப்பு, சாண எரிவாயு ஆக்கம் அல்லது சமூக அளவிலான உரமாக்கலுக்கு பயிற்சி கொடுத்தல்.

(vi) உள்ளாட்சி அமைப்புகள் வரையறுத்தவாறு தகுந்தவாறு பொதிந்து அல்லது வியாபாரக் குறி உரிமையாளர்கள் வழங்கிய உறைகளில் உடனுக்குடன் எடுக்கப்பட்ட பயன்படுத்திய சுகாதாரக் கழிவுகளை பாதுகாப்பாக உறையிடவேண்டும். மக்காத கழிவுகளை அதற்கான தொட்டிகளில் வைக்கவேண்டும்.

(vii) கழிவு உருவாக்கும் இடத்திலேயே உள்ள பல்வேறு தொட்டிகளில் பிரிக்கப்பட்ட கழிவுகளை சேமிக்கவேண்டும்.

(viii) பிரிக்கப்பட்ட கழிவுகளை கழிவு சேகரிப்பவர்கள் மற்றும் கழிவு பொறுக்குபவர்கள், மறுசுழற்சியாளர்கள் அல்லது கழிவு சேகரிப்பு முகவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

(ix) திடக் கழிவு மேலாண்மை நிலைத்திட உள்ளாட்சி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட நபரிடம் அல்லது உள்ளாட்சி அமைப்பிடம் அல்லது கழிவு சேகரிப்பவரிடம் மாத கட்டணம் அல்லது பயன்பாட்டுக் கூலியை செலுத்திடவேண்டும்.

(zh) விதி 23–ல் குறிப்பிட்டுள்ளவாறு சுகாதார கழிவுகள் புதைக்கப்பட்ட நிலம் இயக்கப்படுவதற்கும் கட்டமைப்பதற்கும் காலவரையறை முடிந்த பின்னர், கலப்புக் கழிவுகளை கொட்டுவது அல்லது நிலத்தில் நிரப்புவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

(zi) அட்டவணை–1இல் உள்ள விவரக்குறிப்புகளை நிறைவு செய்யும் வகையில் உள்ள மறுபயன்பாடு அல்லாத, மக்காத, மறுசுழற்சி செய்யமுடியாத, எதிர்வினையல்லாத மந்தமான கழிவுகள் மற்றும் முன் செயலாக்க நிராகரித்தல் மற்றும் கழிவு செயல்முறை வசதிகளிலிருந்து வரும் வண்டல்கள் ஆகியன மட்டுமே சுகாதார கழிவுகள் புதைக்கப்படும் இடங்களுக்குள் அனுமதிக்கப்பட வேண்டும். எனினும், பூஜ்யக்கழிவு என்ற விரும்பிய நோக்கத்தை எய்துவதற்கு கழிவுகளை மறுசுழற்சி அல்லது மறுபயன்பாடு செய்ய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும்.

(zj) அனைத்து பழைய திறந்தவெளி கொட்டும் இடங்கள், தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் கொட்டும் இடங்களை, உயிரி மீட்டெடுத்தல் மற்றும் உயிரி சுரங்கம் அமைத்தல் சாத்தியமா என ஆய்வு செய்து சாத்தியமான பின்னர் இடங்களில் உயிரி மீட்டெடுப்பதற்கு அல்லது உயிரி சுரங்கம் அமைக்க தகுந்த செயல் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

(zk) கொட்டும் இடங்கள் உயிரி மீட்டெடுப்பதற்கும் அல்லது உயிர் சுரங்கத்திற்கு உகந்ததாக இல்லையெனில், அதனை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதைத்

தடுக்கும் வகையில் கழிவுகள் புதைக்கப்பட்ட இடத்தை மூடும் நெறிகளின்படி அறிவியல் பூர்வமாக மூடப்படவேண்டும்.

**16. மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுக் குழுவின் கடமைகள்:**

(a) மாநிலங்கள் அதன் ஆட்சி எல்லைக்குட்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் வாயிலாக இந்த விதிகளை செயல்படுத்தி இந்த விதிகள் நடைமுறைப்படுத்துதலை மாநில நகர்ப்புற வளர்ச்சித் துறையின் பொறுப்பு செயலாளர் அல்லது நகராட்சி நிர்வாக இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து ஆண்டிற்கு இருமுறையாவது சீராய்வு செய்ய வேண்டும்.

(b) சுற்றுச்சுழல் தரங்கள் மற்றும் அட்டவணை–1 மற்றும் அட்டவணை–2இல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு கழிவு செயல் முறைகள் மற்றும் ஒரு வகைசெய்யும் இடங்களை கண்காணிக்க வேண்டும்.

(c) உள்ளாட்சிகளால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய யாதொரு முகவரமைப்பும் அல்லது உள்ளாட்சியிடமிருந்து விண்ணப்பப் படிவம் 1–ஐப் பெற்றபின் அங்கீகரிக்கப்படவேண்டிய திட்டங்களை ஆய்வு செய்து அதற்கான தகுந்த விசாரணை மேற்கொள்ளவேண்டும்.

(d) அங்கீகரிக்கப்பட வேண்டிய திட்டங்களை ஆய்வு செய்யும் பொழுது ஏனைய மாநில நகர்ப்புற வளர்ச்சித்துறை, நகர நாட்டுப்புற திட்டமிடல் துறை, மாவட்ட திட்டக் குழு அல்லது பெருநகர பகுதி திட்டக் குழு, விமான நிலையம் அல்லது விமானதள அதிகார மன்றம், நிலத்தடி நீர் வாரியம், ரயில்வே, மின் விநியோக நிறுவனங்கள், நெடுஞ்சாலை துறை மற்றும் ஏனைய தொடர்புடைய பல்வேறு முகவரமைப்பின் கருத்துக்கள் மற்றும் அந்தந்த சட்ட திட்டங்களின்

ஒப்புதலுக்குட்பட்டு கருதிப் பார்க்கப்பட்டு அவர்களின் கருத்துக்களை அளிப்பதற்கு அவர்களுக்கு நான்கு வாரம் கால அவகாசம் வழங்கப்படும்.

(e) பிற நிபந்தனைகளுடன் அட்டவணை–1 மற்றும் அட்டவணை 2இல் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தரங்கள் மற்றும் நிறைவேற்றுகை அளவுகோலினை கடைபிடிக்கும் உள்ளாட்சி அமைப்பால் அனுமதியளிக்கப்பட்ட ஏனைய யாதொரு முகவரமைப்பு அல்லது இயந்திரத்தை இயக்குபவர் அல்லது உள்ளாட்சி அமைப்பிற்கு படிவம் II–இல் 60 நாட்களுக்குள் அனுமதி வழங்கிடவேண்டும்.

(f) ஒப்புதல்களின் செயல்திறனுடன் மேற்சொன்ன அனுமதிக்காக செயல்திறனை ஒத்திருக்கச் செய்தல்.

(g) குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சி அமைப்பு அல்லது வசதி செய்பவர் உரிய பணிகளிலிருந்து தவறிவிட்டால் எந்த நேரத்திலும் உட்பிரிவு (a) மூலம் அளிக்கப்பட்ட அங்கீகாரத்தை தடை அல்லது ரத்து செய்திட வேண்டும். ஆனால் உள்ளாட்சி அமைப்பு அல்லது நிறுவனத்திற்கு அறிக்கையளிக்காமல் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரத்தை தடை செய்யவோ அல்லது ரத்து செய்யவோ கூடாது.

(h) புதுப்பித்தலுக்காக அளிக்கப்படும் விண்ணப்பத்தினை பெற்று, ஒவ்வொரு விண்ணப்பங்களின் தகுதிகளை ஆய்வு செய்து, அங்கீகாரத்தை அடுத்த ஐந்து ஆண்டிற்கு புதுப்பிக்கவேண்டும். ஆனால் வசதி இயக்குபவர் சுற்றுச்சூழல் அனுமதி ஆணை, ஒப்புதல்கள், அங்கீகாரங்களில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அல்லது தரங்கள் உட்பட அனைத்து விதிகளையும் நிறைவேற்றியிருக்கவேண்டும்.

**(2)** மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாசு கட்டுப்பாட்டுக் குழு, விண்ணப்பதாரரிடம் கேட்டறிய போதுமான அளவு வாய்ப்பு கொடுத்து அவருடைய அங்கீகாரம் எதற்காக புதுக்கப்படவில்லை அல்லது வழங்கப்படவில்லை என்பதற்குண்டான காரணங்களை எழுத்துவடிவத்தில் பதிவு செய்யவேண்டும்.

**(3)** புதிய தொழில்நுட்பங்களாக இருப்பின், மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம், மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசு கட்டுப்பாட்டு குழு அதற்கான உரிய தரங்களை வரையறுக்க மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தை அணுகலாம்.

**(4)** நேர்விற்கேற்ப மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசு கட்டுப்பாட்டு குழு ஏற்பளிக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட தரங்கள் மற்றும் ஏற்பளிக்கப்பட்ட சுத்திகரிப்பு தொழில்நுட்பம் மற்றும் அனுமதியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் இதே விதியின் கீழ் அட்டவணைகள் 1 மற்றும் 2–ல் குறிப்பிடப்பட்ட தரங்கள் உரியவாறாக கருதப்பட்டபோது ஆனால் ஓராண்டிற்கு குறையாத அளவில் பின்பற்றப்படுவதை கண்காணிக்க வேண்டும்.

**(5)** அபாயகரமான கழிவு கொட்டும் இயந்திரங்களில் கழிவு உருவாக்குபவரால் உள்ளூர் அபாயகரமான கழிவுகளை கொட்டுவதற்கும் மற்றும் பாதுகாப்பாக கையாளுவதற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாசு கட்டுப்பாட்டுக் குழு அறிவுரைகள் வழங்கலாம்.

**(6)** மாநிலங்களுக்குள் கழிவு கொண்டு செல்லப்படுவதை மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாசு கட்டுப்பாட்டுக் குழு ஒழுங்குபடுத்த வேண்டும்.

**17. டயபர்கள் மற்றும் சுகாதார பஞ்சுகள் மற்றும் தூக்கி எறியப்படும் பொருட்களின் விற்பனைக்குறி உரிமையாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்களின் கடமைகள்:**

**(1)** தகரம், கண்ணாடி, பிளாஸ்டிக்கை கொண்டு சிப்பமாக்குதல் ஆகிய தூக்கி எறியக்கூடிய

பொருள்களின் தயாரிப்பாளர்கள் அல்லது அந்த பொருளை சந்தைக்கு அறிமுகப்படுத்தும் விற்பனைக்குறி உரிமையாளர்கள் அனைவரும், கழிவு மேலாண்மை அமைப்பினை ஏற்படுத்த உள்ளாட்சி அமைப்பு தக்க நிதியுதவி செய்திட வேண்டும்.

**(2)** மக்காத வகையிலிருக்கும் பிளாஸ்டிக்கை கொண்டு சிப்பமாக்கப்பட்ட அந்தந்த விற்பனைக்குறி உரிமையாளர்கள் விற்பனைக்கு அல்லது சந்தைக்கு கொண்டு வரும் பொருட்களினால் அவர்கள் தயாரிக்கும் பொருட்டு வெளிவரும் சிப்பமாக்கும் கழிவுகளை சேகரிப்பதற்கு ஏற்பாட்டு முறை ஒன்றை அமைக்க வேண்டும்.

**(3)** சுகாதார பஞ்சுகள் மற்றும் டயபர்களை தயாரிப்பவர்கள் அல்லது விற்பனைக்குறி உரிமையாளர்கள் அல்லது சந்தை செய்யும் நிறுவனங்கள் அனைத்தும் மறுசுழற்சி பொருட்களையும் அவர்களுடைய பொருட்களில் முடிந்தவரை பயன்படுத்த வழிவகை செய்திட வேண்டும் அல்லது அவர்களுடைய சுகாதார பொருளின் உறையிலேயே அந்த டயபர் அல்லது சுகாதார பஞ்சுகளை அகற்றிட ஒரு சிறு பை அல்லது உறையை வைத்திடவேண்டும்.

**(4)** அனைத்து தயாரிப்பவர்கள், விற்பனைக்குறி உரிமையாளர்கள் அல்லது சந்தை செய்யும் நிறுவனங்கள் அவர்களுடைய பொருட்களை அகற்றிடவும் உறையிடவும் மக்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

**18. திடக்கழிவு அடிப்படையிலாத கழிவிலிருந்து பெறப்படும் எரிபொருள் தளவாடத்திலிருந்து நூறு கிலோமீட்டருக்குள் நிறுவப்பட்டுள்ள தொழிலக பிரிவுகளின் கடமைகள்:**

திடக்கழிவு அடிப்படையிலான கழிவிலிருந்து பெறப்படும் எரிபொருள் தளவாடத்திலிருந்து நூறு கிலோமீட்டருக்குள் நிறுவப்பட்டு எரிபொருள் பயன்படுத்தும் தொழிலக பிரிவுகள் அனைத்தும், இந்த விதிகள் வெளியிடப்பட்ட ஆறு மாத காலத்திற்குள்

அவர்கள் பயன்படுத்தும் எரிபொருளில் குறைந்தது 5 விழுக்காடு அளவிற்கு ஒதுக்கப்பட்ட கழிவிலிருந்து பெறப்படும் எரிபொருளை பயன்படுத்த ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

**19. திடக்கழிவு செய்முறைபடுத்துதல் மற்றும் சுத்திகரிப்பு வசதியினை ஏற்படுத்துவது தொடர்பான கடமைகளுக்கான அளவுகோல்:**

**(1)** நிலம் ஒதுக்கீட்டிற்கு பொறுப்பு வகிக்கின்ற துறையானது திடக்கழிவு செய்முறைகள் மற்றும் சுத்திகரிப்பு வசதிகளுக்கு தகுந்த நிலங்களை ஒதுக்குவதற்கு பொறுப்பானதாகும். அந்த இடங்களை மத்திய மாநில அரசு மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பணி நிருவாகம் வாயிலாக அறிவிக்கையிடும்.

**(2)** நகர்புர வளர்ச்சி அமைச்சகம் தயார் செய்த திடக்கழிவு மேலாண்மை குறித்த கையேடு மற்றும் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் அவ்வப்போது இது தொடர்பான வழங்கிய தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை பின்பற்றி வசதி செய்பவர், வசதியினை வடிவமைத்திட வேண்டும்.

**(3)** மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாசு கட்டுப்பாட்டுக் குழுவிடமிருந்து வசதி நிறுவனம் உரிய அனுமதி பெற்றிருக்கவேண்டும்.

**(4)** திடக்கழிவு செய்முறை மற்றும் சுத்திகரிப்பு வசதிகளின் சுற்றுப்புற சூழல் செயல்பாட்டு தரங்களை மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாசு கட்டுப்பாட்டுக் குழு கண்காணித்திட வேண்டும்.

**(5)** திடக்கழிவு செய்முறை மற்றும் சுத்திகரிப்பு இடத்தின் இயக்குபவர் மற்றும் நகர்ப்புர வளர்ச்சி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட திடக்கழிவு மேலாண்மை குறித்த கையேடு மற்றும் அவ்வப்போது மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டி குறிப்புகளின்படி திடக்கழிவு செயல்முறைப்படுத்துதல் அல்லது சுத்திகரிப்பு இடத்தில்

பாதுகாப்பான மற்றும் சுற்றுச்சூழல்களுக்கு உகந்த செயல்பாடுகளுக்கு பொறுப்பாளர் ஆவார்.

**(6)** சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாசு கட்டுப்பாட்டுக் குழுவிடம் திடக்கழிவு செயல்முறைப்படுத்தல் மற்றும் சுத்திகரிப்பு இடத்தின் இயக்குபவர் ஒவ்வொரு ஆண்டின், ஏப்ரல் மாதம் **30** தேதிக்குள் படிவம் **3–**ல் ஆண்டறிக்கையை அளிக்க வேண்டும்.

**20. மலைப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைக்காக எடுக்கப்படவேண்டிய அளவுகோல்:** மலை பகுதிகளில், கீழ் விவரிக்கப்பட்டுள்ள கூடுதல் பகுதிகளுடன் விதி **15**ல் உள்ளாட்சி அதிகாரமன்றங்களுக்கான மற்றும் கடமைகள் பொறுப்புகள் அனைத்தும் பொருந்தும்.

(a) மலைப்பகுதிகளில் கழிவுகள் புதைக்கப்பட்டு ஒருவகை செய்யப்பட்ட இடத்தை அமைப்பதை தவிர்க்க வேண்டும். செய்முறைப்படுத்துதல் இடத்திலிருந்து எஞ்சிய கழிவையும் அபாயமற்ற கழிவினையும் இருப்புவைக்கப்படும் இடங்களிலிருந்து சேகரிப்பதற்கு தக்க உள்ளடக்கமிக்க இடத்தில் ஒரு மாற்று நிலையங்களை அமைக்க வேண்டும். சுகாதார கழிவுகள் புதைக்கப்பட்டு ஒருவகை செய்யப்படும் இடத்தை அமைக்க மலையில் இருந்து **25** கி.மீ கீழுள்ள சமவெளி பகுதிகளில் தகுந்த இடம் அடையாளம் காணப்படவேண்டும். மாற்று நிலையங்களிலிருந்து வெளிவரும் எஞ்சிய கழிவுகளை அந்த சுகாதார கழிவுகள் புதைக்கப்பட்டு ஒருவகை செய்யப்பட்ட இடத்தில் கொட்டப்படவேண்டும்.

(b) அத்தகைய நிலம் கிடைக்கவில்லையெனில், எஞ்சிய மற்றும் அபாயகரமான கழிவுகளை கொட்ட, வட்டார சுகாதார கழிவுகள் புதைக்கப்பட்டு ஒருவகை செய்யப்படும் இடத்தை அமைக்கப்பட வேண்டும்.

(c) உள்ளாட்சி அமைப்புகள் துணை விதிகளை வழிவகுக்க வேண்டும் மற்றும் குடிமக்கள் கழிவுகளை சாலைகளில் தூக்கியெறிவதை தடைசெய்ய வேண்டும். காகிதம், தண்ணீர் பாட்டில்கள், குளிர்பான பாட்டில்கள் மற்றும் அட்டை பாக்கெட்டுக்கள் அல்லது ஏனைய பிளாஸ்டிக் அல்லது காகித கழிவுகளை மலைகளுக்கு கீழ் அல்லது சாலைகளில் கொட்டாமல் இருப்பதற்கு கடுமையான வழிமுறைகளை சுற்றுலா பயணிகளுக்கு வழங்கிடவேண்டும் அதற்கு மாறாக அத்தகைய கழிவுகளை அனைத்து சுற்றுலா தலங்களிலும் உள்ளாட்சி மன்றத்தால் வைக்கப்பட்டுள்ள குப்பை தொட்டிகளில் போடுவதற்கு அவர்களை வலியுறுத்த வேண்டும்.

(d) மலைப்பகுதிகளை சுற்றிப்பார்க்க வரும் அனைத்து சுற்றுலா பயணிகளிடமும் புறநகரின் நுழைவு வாயில்கள் மற்றும் சுற்றுலா தலங்களில் விளம்பரங்கள் வாயிலாகவும் உணவு விடுதிகள், சுற்றுலா விடுதிகள் அல்லது எங்கெல்லாம் சுற்றுலா பயணிகள் தங்குகிறார்களோ, அங்கு துணைவிதிகளில் உள்ள திடக்கழிவு மேலாண்மை குறித்து உள்ளாட்சி அமைப்புகள் எடுத்துரைக்க, தக்க வழிவகை செய்யவேண்டும்.

(e) திடக்கழிவு மேலாண்மை சேவைகள் நிலைத்திட சுற்றுலா பயணிகளிடமிருந்து நுழைவு வாயிலேயே திடக்கழிவு மேலாண்மை கட்டணத்தை உள்ளாட்சி அமைப்பு வசூல் செய்திட வேண்டும்.

(f) நில ஒதுக்கீட்டிற்கு பொறுப்பு வகிக்கின்ற துறையானது, மலைகளில் பரவலாக்கப்பட்ட கழிவு செய்முறை இடங்களை அமைக்க தகுந்த இடவதிகளை அடையாளம் கண்டு ஒதுக்கீடு செய்யவேண்டும். அந்த இருப்பு வைக்கப்படும் இடங்களை, உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும். மலைப்பகுதிகளை முழுமையாக பயன்படுத்த படிதோட்ட ஏற்பாட்டு முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

**21. கழிவிலிருந்து எரிசக்தி செய்முறைக்கான அளவுகோல்:**

**(1) 1500** K/Cal/KG அல்லது அதற்குமேல் வெப்ப அலகு உடைய மறு சுழற்சி செய்யமுடியாத கழிவுகளை, கழிவுகள் புதைக்கப்பட்டு ஒருவகை செய்யப்பட்ட இடத்தில் கொட்டக்கூடாது. கழிவுகளிலிருந்து பெறப்படும் எரிபொருள் வாயிலாக எரிசக்தி உருவாக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் அல்லது கழிவிலிருந்து பெறப்படும் எரிபொருள் தயாரிக்க மூலப்பொருளாக வழங்கப்பட வேண்டும்.

**(2)** அதிக வெப்ப அலகுடைய கழிவுகளை சிமெண்ட் அல்லது அனல் மின் நிலையங்களில் உடன் செய்முறைக்குபயன்படுத்திட வேண்டும்.

**(3)** ஒரு நாளைக்கு **5** டன்களுக்கு மேல் செய்முறை கொள்ளளவை கொண்ட கழிவிலிருந்து எரிசக்தி தயாரிக்க கருதுகின்ற உள்ளாட்சி அமைப்புகள் அல்லது இயக்குபவர் அல்லது நியமனம் செய்யப்பட்ட முகவரமைப்பாளர்கள் படிவம் **1–**ல் உள்ள விண்ணப்பத்தை அந்த இடத்திற்குரிய மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசு கட்டுப்பாட்டுக் குழுவிடம் அளிக்கப்படவேண்டும்.

**(4)** மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசு கட்டுப்பாட்டுக் குழு அவ்வாறு கழிவிலிருந்து ஆற்றல் உற்பத்தி செய்யும் இடத்தை அமைப்பதற்கு பெறப்பட்ட விண்ணப்பங்களை, ஆய்வு செய்து **60** நாட்களுக்குள் ஒப்புதல் வழங்கிட வேண்டும்.

**22. நடைமுறைப்படுத்த வேண்டிய காலவரையறை:**

இந்த விதிகளை நடைமுறைப்படுத்த வேண்டிய உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஏனைய சம்மந்தப்பட்ட அதிகாரிகள், நேர்விற்கேற்ப அவர்களாக நேரடியாக அல்லது முகவரமைப்பாளர்களை ஈடுபடுத்துவதன் வாயிலாக கீழ்குறிப்பிட்டுள்ள காலவரையறைக்குள் போதுமான உட்கட்டமைப்பை ஏற்படுத்தவேண்டும்.

| **தொடர் எண்** | **செயல்பாடுகள்** | **இந்த விதிகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து கால அளவு** |
|---|---|---|
| 1. | திடக் கழிவு செய்முறை இடங்களை ஏற்படுத்துவதற்கான உரிய இடங்களை கண்டறிதல். | ஓராண்டு |
| 2. | 0.5 மில்லியன் மக்கள் தொகைக்குக் குறைவான உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள உரிய | ஓராண்டு |

| | | |
|---|---|---|
| | தொகுதிகளுக்கு ஏற்ப பொது வட்டார சுகாதார கழிவுகளை ஒருவகை செய்யும் பகுதியை ஏற்படுத்துவதற்காகவும், **0.5** மில்லியன் மக்கள் தொகைக்கும் மிகையாக உள்ள உள்ளாட்சி மன்றங்களில் உள்ள உரிய தொகுதிகளுக்கு ஏற்ப பொது அல்லது வட்டார சுகாதார கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியை ஏற்படுத்துவதற்காகவும் அல்லது கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியை ஏற்படுத்துவதற்காகவும் அல்லது தனி வட்டார சுகாதார கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியை அமைக்க உரிய இடங்களை அடையாளங்கள் கண்டறிதல். | |
| 3. | சுகாதார கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியை ஏற்படுத்துவதற்காகவும் மற்றும் திடக்கழிவுகளை பதப்படுத்தும் வசதிகளை ஏற்படுத்துவதற்குரிய திறன்கள் அமைக்க உரிய இடங்களை வாங்குதல். | இரண்டாண்டுகள் |
| 4. | அந்த இடத்திலேயே மந்தமான திடக்கழிவுகள், வீட்டு அபாய பொருட்கள், சுகாதார கழிவுகள், சாம்பலாகக்கூடிய, மறுசுழற்சி செய்யக்கூடிய, இயற்கையாக மக்கும் தன்மையுடைய கழிவுகளை பிரித்தெடுப்பதற்கான சாதனங்களை நிறுவுதல். | இரண்டாண்டுகள் |
| 5. | கழிவுகளை பதனிடுவதற்காகவும், ஒரு வகை செய்வதற்காகவுமான வசதிகளுக்காக பிரித்தெடுக்கப்பட்ட கழிவுகளை வீடு வீடாக சென்று சேகரிக்கவும் மூடிய வண்டிகள் மூலம் கொண்டு செல்வதையும் உறுதி செய்தல். | இரண்டாண்டுகள் |
| 6. | கட்டட கட்டுமானம் மற்றும் சிதைந்த கட்டட கழிவுகளை தனியாக இருப்பு வைப்பதையும், சேகரிப்பதையும் மற்றும் கொண்டு செல்வதையும் உறுதி செய்தல் | இரண்டாண்டுகள் |
| 7. | ஒரு இலட்சம் அல்லது அதற்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட அனைத்து உள்ளாட்சி மன்றங்களால் திடக்கழிவு பதனிடும் வசதிகளை ஏற்படுத்துதல். | இரண்டாண்டுகள் |
| 8. | ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் நகரங்களில் திடக்கழிவு பதனிடும் வசதிகளை ஏற்படுத்துதல். | மூன்றாண்டுகள் |
| 9. | இந்த விதிகளில் அனுமதியளிக்கப்பட்டவாறு, சுத்திகரிக்கப்படாத மந்தமான கழிவுகள் மற்றும் பதப்படுத்துதலுக்கு பின்னால் உள்ள எஞ்சிய கழிவுகளை அகற்றவும் **0.5** மில்லியன் அல்லது அதற்கு மேல் மக்கள் தொகை உள்ள உள்ளாட்சி மன்றங்களில் பொதுவான அல்லது தனியான வகை கழிவுகளை ஒரு | மூன்றாண்டுகள் |

| | | |
|---|---|---|
| | வகை செய்யும் பகுதிகளை அமைத்தல். | |
| 10. | இந்த விதிகளில் அனுமதியளிக்கப்பட்டவாறு கழிவுகள் அகற்ற 0.5 மில்லியன் மக்கள் தொகைக்கு கீழுள்ள உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் நகரங்களில் பொது அல்லது வட்டார அளவிலான கழிவுகளை ஒருவகை செய்யும் பகுதியை அமைத்தல். | மூன்றாண்டுகள் |
| 11. | பழைய மற்றும் கைவிடப்பட்ட கழிவுகளை கொட்டும் இடங்களை மூடவும் அல்லது உயிரி தீர்வாக்கலுக்கும். | ஐந்தாண்டுகள் |

23. மாநில அளவிலான ஆலோசனைக் குழு, சம்மந்தப்பட்ட அரசு மற்றும் மத்திய ஆட்சிப் பகுதிக்குட்பட்ட உள்ளாட்சித்துறைக்கு பொறுப்பான ஒவ்வொரு துறையும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட மாநில அளவிலான ஆலோசனைக் குழுவினை விதிகள் அறிவிக்கையிடப்பட்ட ஆறுமாத காலத்திற்குள் அமைத்திட வேண்டும்.

| வ. எண் | பதவி பெயர் | உறுப்பினர் |
|---|---|---|
| 1. | அரசு செயலாளர், நகர்ப்புர வளர்ச்சித் துறை அல்லது மாநில உள்ளாட்சி மன்றங்கள் துறை. | அலுவல் ரீதியான தலைவர் |
| 2. | மாநில அரசின் உள்ளாட்சி அல்லது ஊரக வளர்ச்சித் துறையிலுள்ள இணைச் செயலாளர் பதவி தரத்திற்குக் குறையாத ஒரு பிரதிநிதி. | அலுவல் ரீதியான உறுப்பினர் |
| 3. | மாநில அரசின் வருவாய் துறையில் இருந்து ஒரு பிரதிநிதி. | அலுவல் ரீதியான உறுப்பினர் |
| 4. | மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் வானிலை மாற்றத்திற்கான அமைச்சகத்திலிருந்து ஒரு பிரதிநிதி. | அலுவல் ரீதியான உறுப்பினர் |
| 5. | இந்திய அரசு நகர வளர்ச்சித் துறையிலிருந்து ஒரு பிரதிநிதி. | அலுவல் ரீதியான உறுப்பினர் |
| 6. | இந்திய அரசு ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து ஒரு பிரதிநிதி. | அலுவல் ரீதியான உறுப்பினர் |
| 7. | மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து ஒரு பிரதிநிதி. | அலுவல் ரீதியான உறுப்பினர் |
| 8. | மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசு கட்டுப்பாட்டு குழுவிலிருந்து ஒரு பிரதிநிதி. | அலுவல் ரீதியான உறுப்பினர் |
| 9. | மத்திய தொழில் நுட்ப கழகம் அல்லது தேசிய தொழில் நுட்ப கழகத்திலிருந்து ஒரு பிரதிநிதி. | அலுவல் ரீதியான உறுப்பினர் |
| 10. | மாநில தலைமை நகர வரைவாளர் / திட்டமிடுபவர். | உறுப்பினர் |
| 11. | சுழற்சி முறையில் உள்ளாட்சி அமைப்பிலிருந்து மூன்று பிரதிநிதிகள். | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 12.. | சுழற்சி முறையில் நகர புள்ளியல் அல்லது நகர திரளிலிருந்து இரண்டு பிரதிநிதிகள். | உறுப்பினர் |
| 13. | திடக்கழிவு மேலாண்மை அல்லது குப்பை எடுப்பவர்கள் அல்லது முறைசாரா மறுசுழற்சிக்காக வேலை செய்யும் புகழ்வாய்ந்த அரசுசாரா நிறுவனங்கள் அல்லது சமூகத்திலிருந்து ஒரு பிரதிநிதி. | உறுப்பினர் |
| 14. | மத்திய அல்லது மாநில அளவிலான தொழிற்சாலைகளுக்காக அனுப்பப்பட்ட குழுவிலிருந்து ஒரு பிரதிநிதி. | உறுப்பினர் |
| 15. | கழிவு மறுசுழற்சி தொழிற்சாலையிலிருந்து ஒரு பிரதிநிதி. | உறுப்பினர் |
| 16. | இப்பொருண்மை தொடர்பான இரண்டு வல்லுநர்கள். | உறுப்பினர் |
| 17. | மாநில அரசின் விவசாயத் துறை மற்றும் தொழிலாளர் துறையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதி. | உறுப்பினர் |

(2) திடக்கழிவு மேலாண்மை குறித்த விதிகளை செயல்படுத்துவது தொடர்பான மாநில கொள்கை, உத்திகள் ஆகியவை பற்றி ஆய்வு செய்து அதுகுறித்து ஆறு மாதத்திற்கு ஒரு முறையேனும் மாநில அளவிலான ஆலோசனை குழு கூடி இந்த விதிகளை உரிய முறை மற்றும் விரைவாக செயல்படுத்துவது குறித்து மாநில அரசிற்கு உரிய ஆலோசனை வழங்கவேண்டும்.

(3) மேற்சொன்ன ஆய்வு அறிக்கையின் நகல்களை உரிய நடவடிக்கைக்காக மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசு கட்டுப்பாட்டு குழுவுக்கு அனுப்பப்படவேண்டும்.

**24. ஆண்டறிக்கை:**

(1) வசதி ஒன்றை இயக்குபவர் படிவம்–IIIல் உள்ள ஆண்டறிக்கையை ஒவ்வொரு ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதிக்குள் உள்ளாட்சி அமைப்பிற்கு அளிக்கவேண்டும்.

(2) உள்ளாட்சி அமைப்பு படிவம்–IVல் உள்ள ஆண்டறிக்கையை மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசு கட்டுப்பாட்டு குழு மற்றும் அம்மாநில அல்லது யூனியன் பிரதேச நகர வளர்ச்சித் துறை பொறுப்பு செயலாளருக்கும், தலைநகரம் என்றால்

நகராட்சி நிர்வாக இயக்குநர் அல்லது நகராட்சி நிர்வாக ஆணையாளர் அல்லது அம்மாநில நகர உள்ளாட்சி அமைப்பு பொறுப்பு அலுவலர் மற்றும் அனைத்து மாநில இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கவேண்டும்.

(3) ஒவ்வொரு மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாசு கட்டுப்பாட்டு குழு இந்த விதிகளை நடைமுறைப்படுத்திய மற்றும் நடைமுறைபடுத்தாத உள்ளாட்சி அமைப்பின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தொகுக்கப்பட்ட ஆண்டறிக்கையை தயார் செய்து மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் நகர வளர்ச்சி அமைச்சரவைக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் 31 ஆம் தேதிக்குள் படிவம்–Vல் சமர்ப்பிக்கவேண்டும்.

(4) மத்திய மாநில கட்டுப்பாட்டு வாரியம் நாட்டில் உள்ள நகராட்சி மன்றங்களால் இந்த விதிகளைச் செயல்படுத்தப்படும் நிலை குறித்து தொகுக்கப்பட்ட ஆண்டு ஆய்வு அறிக்கையை தயார் செய்து அதனை நகரப்பகுதி மேம்பாட்டு அமைச்சகம், சுற்றுச்சூழல், வனம் மற்றும் வானிலை மாற்றத்திற்கான அமைச்சகத்திற்கு அதன் பரிந்துரைகளுடன் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் தேதிக்குள் அனுப்பிட வேண்டும்.

(5) ஆண்டறிக்கை குறித்து சுற்றுச்சூழல், வனம் மற்றும் வானிலை மாற்றத்திற்கான அமைச்சரவையின் மத்திய கண்காணிப்புக் குழுவின் கூட்டத்தின்போது விவாதிக்க வேண்டும்.

**25. விபத்து குறித்து தெரிவித்தல்:** திடக்கழிவு பதனிடும் அல்லது சுத்திகரிக்கும்போது அல்லது ஒருவகை செய்யும்பொழுது அல்லது கழிவுகளை ஒருவகை செய்யும் பகுதியில் விபத்து ஏற்படுகின்ற நேர்வில் அந்த உள்ளாட்சி அமைப்பு பொறுப்பு அலுவலருக்கு படிவம்–VIல் உள்ளவாறு அறிக்கையை உள்ளாட்சி அமைப்பிடம் அளிக்க வேண்டும். பின்னர் அதுகுறித்து உள்ளாட்சி அமைப்பு ஆய்ந்து தக்க அறிவுரைகள் ஏதும் இருப்பின் வசதி பொறுப்பு அதிகாரிக்கு அளிக்கவேண்டும்.

## அட்டவணை – I

**(விதி 15 (W), (Zi), 16(1)(b), (e), 16(4) காண்க**

கழிவுகளை ஒருவகை செய்வதற்கான தூய்மைப்பகுதி பற்றிய குறிப்பீடுகள்:

(A) இடங்களை தேர்வு செய்வதற்கான நெறிமுறை:

(i) நில ஒப்படைப்பு செய்யவேண்டி ஈடுபட்டுள்ள துறைகள், வசதிகள் ஏற்படுத்தவும் திடக்கழிவு செயல்முறை அமைக்கவும் ஏற்றவாறு தகுந்த இடங்களை ஒதுக்கீடு செய்து, அத்தகைய இடங்களை அறிக்கையிடவேண்டும்.

(ii) கழிவுகளை ஒருவகை செய்யும் பகுதியானது கட்டுமான திட்ட உரிய ஆவணங்களுடன் மேம்பாட்டு முறையுடன் கூடிய திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்பட்டு இருப்பதுடன் அதனை படிப்படியாக மூடும் முறை குறித்தும் திட்டமிட்டுபட்டிருக்க வேண்டும். நடைமுறையில் உள்ள கழிவுகளை ஒருவகை செய்யும் இடத்தினை ஒட்டி, புதியதாக கழிவுகளை ஒருவகை செய்யும் வசதிகளை நிறுவப்படவேண்டுமெனில், செயல்பாட்டில் உள்ள மூடப்பட்ட நிலப்பரப்புகள் புதிய நிலப்பரப்புகள் திட்டத்தின் கருத்துருவின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்.

(iii) அருகிலுள்ள கழிவு செயல்முறை வசதிகளைப் பயன்படுத்துவதற்காக கழிவுகளை ஒருவகை செய்வதற்கான இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இல்லையெனில், நிரப்பரப்பு இடங்களின் ஒருங்கிணைந்த பகுதியாக கழிவு செயல்முறை வசதிகள் திட்டமிடவேண்டும்.

(iv) இந்திய அரசின் நகர்பகுதி மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் வழங்கியுள்ள வழிகாட்டி குறிப்புகளின்படி கழிவுகளை ஒருவகை செய்வதற்கான இடங்கள் அமைக்கப்படவேண்டும்.

(v) ஐந்து வருடங்களுக்கு மேல் செயல்பாட்டிலுள்ள கழிவுகளை ஒருவகை செய்யும் இடங்களை இந்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குறிப்பீடுகளுக்கிணங்க நிறுவப்படவேண்டும்.

(vi) குறைந்தபட்சம் 20–25 வருடங்கள் நிலைத்து நிற்கும் வகையில் கழிவுகளை ஒருவகை செய்வதற்கான இடங்கள் இருக்கும் மற்றும் தண்ணீர் தேங்கி நிற்கும் சூழல்

மற்றும் தவறாக பயன்படுத்தல் ஆகியவற்றினை தடுக்கும் வகையிலான கட்டமைப்பு முறையில் கழிவுகளை ஒருவகை செய்யும் பகுதிகள் படிப்படியாக மேம்படுத்த வேண்டும்.

(vii) கழிவுகளை ஒருவகை செய்வதற்கான பகுதியின் நிலங்கள், ஆறுகளிலிருந்து 100 மீட்டர், குளங்களிலிருந்து 200 மீட்டர், குடிநீர் வழங்கும் கிணறுகள், அரசு பூங்காக்கள், உறைவிடங்கள் நெடுஞ்சாலையிலிருந்து 200 மீட்டர், விமான தளம் அல்லது விமான நிலையத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருக்க வேண்டும். ஆனால், சிறப்பு நேர்வுகளில் அதற்கேற்றவாறு விமான போக்குவரத்து அதிகாரி/விமான படையிடமிருந்து தடையில்லா சான்று பெற்ற பின்னர் விமான தளம்/விமான நிலையங்களிலிருந்து 10 முதல் 20 கிலோ மீட்டருக்குள் கழிவுகளை ஒருவகை செய்யும் இடங்களை அமைக்கலாம். எளிதில் குற்றுச் சூழல் பாதிக்கப்படக்கூடிய பகுதிகள், நெருக்கடிமிக்க குடியிருப்பு பகுதிகள், பாசன நிலங்கள், கடற்கரையோர ஒழுங்கு மண்டலங்கள், கடந்த 100 ஆண்டுகளில் வெள்ளப் பாதிப்புக்குள்ளானதாக பதிவு செய்யப்பட்ட வெள்ளச் சமவெளிகளில் கழிவுகளை ஒருவகை செய்வதற்கான இடங்கள் அனுமதிக்கப்படக்கூடாது.

(viii) திடக்கழிவுகள் அகற்றுதல், பதனிடும் மற்றும் கழிவுகளை ஒருவகை செய்யும் இடங்களை நகர்புற திட்டத்துறையின் நிலப்பயன்பாட்டு திட்டங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

(ix) நாளொன்றுக்கு 5 டன்கள் கொள்திறனுக்கும் அதிக அளவு கொண்ட திடக்கழிவு செயல்முறை மற்றும் கழிவு அகற்றல் வசதிகொண்ட பகுதிகளை சுற்றிலும் மேம்படுத்தப்படாத ஒரு இடைப்பகுதி பராமரிக்கப்பட வேண்டும். கழிவு அகற்றல் திறன் மற்றும் திடக்கழிவு செயல்முறையின் முழு பரப்பளவிற்குள் இது பராமரிக்கப்படும். தொடர்புடைய மாநில அரசின் மாசு கட்டுப்பாட்டு வாரியத்துடன் உள்ளாட்சித் துறையால் நடத்தப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் இடைநிலைத் தாங்கல் இடைப்பகுதி மண்டலங்களை குறிப்பிடப்படவேண்டும்.

(x) அவ்வப்போது சட்டத்திருத்தம் செய்யப்பட்டவாறான 2016–ஆம் ஆண்டு உயிரி–மருத்துவ கழிவு மேலாண்மை விதிகளுக்கிணங்க உயிரிமருத்துவ கழிவுகள் ஒருவகை செய்யப்படவேண்டும். அவ்வப்போது திருத்தப்பட்டவையான 2016–ஆம் ஆண்டு ஆபத்தை விளைவிக்கக்கூடிய மற்றும் ஏனைய கழிவுகளுக்கான விதிகளுக்கிணங்க (நிர்வாகம்

மற்றும் எல்லை கடந்த இயக்கம்) அபாயகரமான கழிவுகள் பராமரிக்கப்படவேண்டும். கணினி கழிவுகளை அவ்வப்போது திருத்தப்பட்டவையான 2016ஆம் ஆண்டு மின்னனு கழிவுகள் (மேலாண்மை) விதியின்படி கையாளப்படவேண்டும்.

(xi) கழிவு செயல்முறை நடைமுறைப்படுத்தப்படாத நேர்விலும் நெருக்கடி கால அல்லது இயற்கை இடர்பாடுகளின்போதும் சேகரிப்பதற்கு ஒவ்வொரு நிலப்பரப்பு இடத்திலும் திடக்கழிவிற்கான தற்காலிக சேகரிப்பு வசதி ஏற்படுத்தப்படவேண்டும்.

B) சுகாதாரமான சூழலிலுள்ள கழிவுகளை ஒருவகை செய்வதற்கான இடங்களில் வசதிகளை மேம்படுத்துவதற்கான நெறிமுறைகள்:—

(i) அனுமதிக்கப்படாத வெளியாட்களையும் அலையும் மிருகங்களையும் தடுக்கும் வகையிலும், உள் நுழையும் வாகனங்களை கண்காணிக்கவும் உரிய வாயிற்கதவுடன் கழிவுகளை ஒருவழி செய்வதற்கான இடங்கள், வேலி அல்லது புதர் வேலி கொண்டு அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

(ii) வண்டிகளின் போக்குவரத்தினால் உருவாகும் தூசுகளை தவிர்ப்பதற்கும், தூசுகளை நிலப்பரப்பியிடங்களை அடையும் மற்றும் உள் சாலைகள் வாகனங்களின் போக்குவரத்திலிருந்தும் உருவாகும் தூசியை தவிர்ப்பதற்கு ஏற்ற வண்ணம் அணுகு / உள்சாலைகள் சிமிட்டி கற்கலவையிடப்பட்டு அல்லது தளமிடப்படவேண்டும் மற்றும் வாகனங்கள் மற்றும் பிற எந்திரங்கள் எளிதில் இயங்குவதை உறுதிப்படுத்தும் வண்ணம் வடிவமைக்கப்படவேண்டும்.

(iii) கழிவுகளை ஒருவகை செய்வதற்கான இடங்களுக்கு கொண்டுவரப்படும் மற்றும் எடுத்துச் செல்லப்படும் கழிவுகளை கண்காணிப்பதற்கான வசதிகள், மாசுகட்டுப்பாட்டுக்கருவி உட்பட பதிவேடுகள் வைக்க அலுவலக வசதி மற்றும் இயந்திரங்கள், கருவிகள் வைப்பதற்கான காப்பிடங்கள் இருக்கவேண்டும். பெறப்பட்ட, பதனிடப்பட்ட கழிவு மற்றும் அப்புறப்படுத்தப்பட்ட கழிவு ஆகியவற்றுக்குள்ளான பதிவேடுகளை செயற்பாட்டாளர் பராமரிக்கவேண்டும்.

(iv) கழிவுகளை ஒருவகை செய்யும் இடத்திற்கு கொண்டுவரப்படும் கழிவுகளின் அளவை எடையிடுவதற்கான எடைமேடை தீத்தடுப்பு சாதனங்கள் மற்றும் தேவைப்படும் ஏனைய வசதிகளும் வழங்கப்படவேண்டும்.

(v) குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் (முக்கியமான பணியாளர்களுக்கு துவைப்பதற்கும் குளிப்பதற்குமான வசதிகள்), கழிவுகளை ஒருவகை செய்யும் பகுதிகளில் இரவு நேரங்களில் சுலபமாக பணிபுரியும் வகையில் போதுமான அளவுக்கு வெளிச்சம் உள்ள வகையில் வசதிகள் போன்ற பயன்பாட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

(vi) கழிவுகளை ஒருவகை செய்வதற்கான இடங்களில் பணியாளர்களுக்கு உடல்நலப் பரிசோதனைகள் உட்பட பாதுகாப்பு வழிமுறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

(vii) திடக்கழிவினை ஏற்றிச்செல்லும் போக்குவரத்து வாகனங்களை நிறுத்துவதற்கும் சுத்தம் செய்வதற்கும் கழுவுவதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறு உருவாகின்ற கழிவுநீரினை வரையறுக்கப்பட்ட தரத்திற்கேற்ப சுத்திகரிக்கப்படவேண்டும்.

C) கழிவுகளை ஒருவகை செய்யும் இடத்தில் அவற்றை நிரப்பிய பின் அதனை மூடுவது அத்தகைய நடவடிக்கைக்கான குறிப்பீடுகள் பற்றிய வரையறை:

(i) அடர்த்தி மிகுந்த கழிவுகளை பெறுவதற்கு கனமான அழுத்திகளைப் பயன்படுத்தி மெல்லிய அடுக்குகளில் நிலத்தில் நிரப்பப்படும் கழிவுகள் அழுத்தப்படவேண்டும். அதிக மழைபெய்யும் பகுதிகளில் கனமான அழுத்தி பயன்படுத்த இயலாதபோது மாற்று முறைகளை உபயோகிக்கலாம்.

(ii) ஆற்றல் மீட்டெடுப்பிற்கு அல்லது மறு சுழற்சிக்கு அல்லது கலப்பு உரமாக்கலுக்கான கழிவுகளை பதப்படுத்தும் வசதிகளை அமைக்கும் வரையில், கழிவுகளை சுகாதார கழிவுகளை ஒருவகை செய்வதற்கான இடங்களுக்கு

அனுப்பிடவேண்டும். குறைந்தது 10 செமீ அளவுக்கு கட்டுமான பொருட்கள் அல்லது மந்தவினை கொண்ட குப்பை கூளங்கள், மண் ஆகியவற்றினை கொண்டு அந்த வேலை நாளின் இறுதியில் அந்த இடங்கள் செல்கள் மூடப்பட்டிருக்கவேண்டும்.

(iii) மழைப்பருவ காலத்தில் வடிகட்ட முடியாத நிலை ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு பருவகாலம் தொடங்குவதற்கு முன் உரிய அழுத்தங்கள் மற்றும் தரநிலை மூலம் 40 முதல் 65 செ.மீ. அளவுக்கு தடிமன் மண்கொண்டு அந்த இடங்களின் மேல் மூடியிருக்கவேண்டும். கழிவுகளை ஒருவகை செய்யும் செயல்பாட்டு செல்களிலிருந்து நீர்வெளியேறுவதை மாற்றிவிடும் வகையில் முறையான வடிகால் கட்டப்பட்டிருக்கவேண்டும்.

(iv) கழிவுகளை ஒருவகை செய்வதற்கான இடத்தில் மண் நிரப்பியபின்னர் மண்அரிப்பு மற்றும் வடிகமிடுதலை குறைக்கும் வகையில் மேற்பரப்பு வடிவமைக்கப்பட்டிருக்கவேண்டும். அந்த இறுதிகட்ட மூடிய உறையானது கீழ்க்குறிப்பிட்டுள்ள குறிப்பீடுகளை பெற்று இருக்கவேண்டும்.

a) 60 செ.மீ. களிமண்ணால் ஆன தடுப்பு மண் அடுக்குபாலங்கள் அல்லது $1 \times 10^{-7}$ செ.மீ / விநாடிக்கும் குறைவான உட்புகு திறன் குணகத்தைக் கொண்ட சீர்ப்படுத்தப்பட்ட மண் கொண்டு மூடியிருக்க வேண்டும்.

b) தடுப்பு மண் அடுக்குபாலங்களுக்கு மேல் பகுதியில் 15 செ.மீ அளவு வடிகால் அடுக்குப்பாளங்கள் இருக்க வேண்டும்.

c) வடிகால் அடுக்குபாலங்களுக்கு மேல், மண் அரிப்பை குறைக்கும் வகையிலும் இயற்கை முறையில் செடிவளர்க்கும் முறையை ஊக்குவிக்கும் வகையிலும் 45 செ.மீ அளவுள்ள தாவர அடுக்குபாலங்கள் இருக்க வேண்டும்.

D) மாசுபடுதலை தடுப்பதற்கான வரையறை:– கழிவுகளை ஒருவகை செய்யும் செயல்முறைகளினால் ஏற்படும் மாசுவை கட்டுப்படுத்த, கீழ்க்குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை ஏற்படுத்த வேண்டும்.

(i) திடக்கழிவு மையங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் நிலப்பரப்பு மையங்களிலிருந்து வழிந்தோடும் மேற்பரப்பு நீர் ஆகியவை நிலத்தடி நீரில் கலக்காதவாறு மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு, கட்டப்பட்டிருக்க வேண்டும். சதுப்பு தன்மை ஏற்படுவது மற்றும் வெள்ளத்தை தடுக்கும் பொருட்டு நீரின் மேற்பரப்பு மாசுபடுவதை தடுக்கும் வகையில் கழிவுநீர் உற்பத்தியை குறைப்பதற்கு திருத்தப்பட்ட நீர் வடிகால் அமைப்பு ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(ii) கழிவு அகற்றும் பகுதிகளின் அடிப்பகுதி மற்றும் சுவர்களின் ஊடுருவ இயலாத அமைப்பாக இருக்கும். கழிவு செயல்முறை அமைப்பில் எஞ்சிய கழிவு அல்லது கலப்புக் கழிவு அல்லது ஆபத்தினை விளைவிக்கும் கழிவுகள் (காற்றுப்புகைகள், சுண்ணாம்புக் கழிவுகள், மெருகேற்றிகள், மின்கலன் கழிவுகள், கழிவு எண்ணெய்கள், வண்ணப்பூச்சுத் தயாரிப்புகள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் போன்றவை) ஆகியன **1.5** மி.மீ. தடிமன் அளவிலான அடர்மிகு பாலி எத்திலீன் (HDPE) புவி –தடுப்பு சவ்வு அல்லது புவி – தொகுப்பு அடுக்குகள் அல்லது அதற்கு சமமான கலப்பு தடுப்புகளால் தடுக்கப்பட்டிருக்க வேண்டும் மற்றும், **1** $\times 10^{-7}$ செ.மீ / விநாடிக்கும் உட்புகுதிறன் குணகத்திற்கு மிகாத **90** செ.மீ அளவுக்கு நிரப்பப்பட்ட மண் (களிமண் அல்லது சீர்படுத்தப்பட்ட மண்) கொண்டு பரப்பப்படும். கழிவுகளை ஒரு வகை செய்யுமிடத்தின் கீழே அமைக்கப்பட்டுள்ள களிமண் அல்லது சீர்படுத்தப்பட்ட மண் தடுப்பு அடுக்கின் அடிப்பகுதிக்கும் கீழே குறைந்தபட்சம் **2** மீ அளவுக்கு நீர் அடுக்கின் உயர்ந்த மட்டம் இருக்க வேண்டும்.

(iii) கழிவு நீரினை சேகரிக்க மற்றும் சுத்திகரிப்பதற்காக மேலாண்மை விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மறுசுழற்சி அளவில் அல்லது அனுமதியளிக்கப்பட்ட அளவில் பயன்படுத்த வேண்டும், மற்றபடி அட்டவணை II–ல் குறிப்பிட்டுள்ள தரத்திற்கு மாற்றிய பின்னர் அவற்றை கழிவு நீர் குழாய்கள் மூலம் வெளியேற்றிட வேண்டும். சுத்திகரிக்கப்படாத, கழிவுநீரை திறந்த வெளியில் வெளியேற்றிட கூடாது.

(iv) குப்பையை ஒரு வகை செய்யுமிடப்பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் ஏரி, குளம், ஆறு, நதி, ஓடை, நீர்த்தேக்கம் ஆகியவற்றில் கலக்காதபடி வழிவகை செய்ய வேண்டும். ஒருவேளை கழிவு நீர் அல்லது திடக்கழிவுகள் ஓடும் நீரில் கலக்கும் பட்சத்தில் அவை சுத்திகரிக்கப்பட வேண்டும்.

(E) நீர்த்தரத்தை கண்காணிப்பதற்கான நெறிமுறைகள்:–

(i) கழிவுகளை ஒரு வகை செய்யுமிடத்தை ஏற்படுத்துவதற்கு முன் அந்த பகுதியில் உள்ள நிலத்தடி நீர் தரத்தின் குறைந்தபட்ச அளவு குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருங்காலத்தில் பயன்படும் வகையில் அத்தரவுகளை வைத்திருக்க வேண்டும். நிலத்தடி நீர் மாசுபடவில்லை என்பதை உறுதி செய்வதற்கு அந்நிலப்பரப்பில் 50 மீ சுற்றுப்பகுதியில் உள்ள நிலத்தடி நீரின் தரம் குறித்து ஒரு ஆண்டில் காலந்தோறும் வரும் வெயில், மழை, குளிர் ஆகிய காலங்களில் பருவந்தோறும் கண்காணிக்கப்பட வேண்டும்.

(ii) நிலப்பரப்புகளைச் சுற்றி பயன்படுத்தப்படும் நிலத்தடி நீர் குடிப்பதற்கு மற்றும் பாசனத்திற்கு அதன் தரத்தினை உறுதிபடுத்திய பின்னரே அது குறித்து தகுதி, கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பட்டியல் குடிநீரின் தரத்தினை கண்காணிப்பு நோக்கத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

அதாவது:–

| **வ.எண்.** | **வரையறைகள்** | **IS 10500:2012 பதிப்பு 2.2. (2003–09) உகந்த அளவு (மிகி) / லிட்டருக்கு pHயை தவிர)** |
|---|---|---|
| **(1)** | **(2)** | **(3)** |
| | அர்சனிக் | **0.01** |
| | கேட்மியம் | **0.01** |
| | க்ரோமியம் ($Cr^{-6+}$) | **0.05** |
| | தாமிரம் | **0.05** |
| | சயனைட் | **0.05** |
| | ஈயம் / காரீயம் | **0.05** |
| | பாதரசம் | **0.001** |
| | நிக்கல் | **–** |
| | நைட்ரேட் ($NO_3$ ஆக) | **45.0** |

| | | |
|---|---|---|
| | pH | 6.5– 8.5 |
| | இரும்பு | 0.3 |
| | மொத்த உறுதித்தன்மை ($CaCo_3$ ஆக) | 300.0 |
| | குளோரைட் | 250 |
| | கரைத்த திண்மங்கள் | 500 |
| | பினாலிக் சேர்மங்கள் ($C_6H_5OH$ ஆக) | 0.001 |
| | துத்தநாகம் | 5.0 |
| | சல்பேட் ($SO_4$ ஆக) | 200 |

(F) காற்று தரத்தினை கண்காணிக்கும் நெறிமுறைகள்:–

(i) மறுசீரமைப்பு கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியில் நடப்பட்டுள்ள பயிர்களை பாதுகாக்கும் வகையில், வாயுக்கள் இடம் பெயர்த்தலை தவிர்க்கும் வகையில், துர்நாற்றத்தைக் குறைக்கும் வகையில் கழிவுகளை ஒருவகை செய்யும் பகுதியில் வாயு கட்டுப்பாட்டு முறைகளில் அடங்கிய வாயு சேகரிப்பு முறையை நிறுவப்பட வேண்டும். கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியை அதிகரித்து வாயுக்களை மீளப்பெறுவதற்காக மூடப்படும் அமைப்புடன் கூடிய வாயு சேகரிக்கும் கிணறுகளில் உயிரி சவ்வுகள் பயன்படுத்துவது குறித்து கருதிபார்க்கப்டும்.

(ii) கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியில் உண்டாக்கப்பட்ட மீத்தேன் வாயுவின் தன்மை 25 விழுக்காடு குறைந்த வெடிபொருள் வரம்பிற்கு மேல் இருக்கக் கூடாது.

(iii) கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியில் சேகரிப்பு திறன் மூலம் ஏற்பட்ட வாயுவை, நேரடி அனல் மின்சாரத்திற்கோ அல்லது மின்சக்தி உற்பத்திக்கோ அதற்கு தகுந்தாற்போல் பயன்படுத்த வேண்டும். மற்றபடி, கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியில் உள்ள வாயுவை எரிக்கப்பட வேண்டும். மற்றும் அதனை நேரடியாக காற்று மண்டலத்தில் கலந்திட அனுமதிக்க கூடாது. அல்லது சட்ட விரோதமாக வெளியேற்ற

கூடாது. எடுக்க முடியாத போதோ அல்லது பயன்படுத்த முடியாத போதோ நேரடியாக வெளியேற்றுவதற்கு போக்கு வழிவகை செய்யப்பட வேண்டும்.

(iv) கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதி மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் உள்ள ஒளிக்காற்று தரம் முறையாக கண்காணிக்கப்பட வேண்டும். ஒளிக்காற்று தரம் தொழிற்சாலை பகுதிக்கு தகுந்தவாறு மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிலகப் பகுதிக்காக வரையறுக்கப்பட்ட தர அளவுகளை பூர்த்தி செய்யும் வகையில் இருக்க வேண்டும்.

(G) கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியில் தோட்டங்கள் அமைப்பதற்கான நெறிமுறைகள்:–

கீழ்க்குறிப்பிட்டுள்ள குறிப்பீடுகளுக்கு இணங்க நிலங்கள் முழுக்க தோட்டம் அமைத்திட வேண்டும்.

(a) அதிக வெப்பநிலை மற்றும் வறட்சியை சமாளிக்கக்கூடிய உண்பதற்கு உதவாத நிலையான செடிகள் நடப்பட வேண்டும்.

(b) அச்செடியின் வேர் முப்பது செ.மீ. க்கு மேல் பூமிக்கடியில் செல்ல முடியாதவாறு உள்ள செடிகளை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நிலப்பரப்பிகள் நிலைப்பாட்டிற்கு வரும்வரை இந்த நிலை பொருந்துமாறு இருக்க வேண்டும்.

(c) தேர்ந்தெடுக்கப்பட்ட செடிகள் குறைந்த சத்துள்ள மண் மற்றும் ஊட்டச்சத்து குறைந்தாலும் அதனை சமாளிக்கும் திறன் உள்ளவையாக இருக்க வேண்டும்.

(d) மண் அரிப்பை தடுக்க போதுமான அடர்த்தியில் தோட்டம் அமைக்கப்பட வேண்டும்.

(e) மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசு கட்டுப்பாட்டு குழுக்களுடன் செய்யப்படும் ஆலோசனைகளின் பேரில் கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியின் எல்லைகளை சுற்றி தாவரங்கள் வளர்க்கப்பட வேண்டும்.

(H) கழிவுகளை ஒரு வகை செய்த அப்பகுதியின் பின் கவனிப்பு முறைக்கான நெறிமுறைகள்:–

1) கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியில், அவ்வாறு ஒரு வகை செய்யப்பட்ட பின்னர் கவனிப்பு முறை பதினைந்து வருடத்திற்கு மிகாமல் நிர்வகிக்கப்படும், நீண்ட கால கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் பின்வருமாறு;

அதாவது:–

(a) முழுமையாகவும், ஆக்கப்பூர்வமுடனும் மூடு பொருளை பராமரித்தல், தொடர்ந்து செயல்படுவது மற்றும் வெளியேறுவது உள்ளிட்ட சாதனங்களை துருபிடித்து அரித்தலிலிருந்து பாதுகாத்தல் மற்றும் செப்பனிடுதல், மற்றபடி மூடு பொருள் சேதமடைவதிலிருந்து பாதுகாத்தல்.

(b) தேவைக்கேற்ப லீசேட்ஸ் சேகரிப்பு முறைகளை கண்காணித்தல்.

(c) கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியைச் சுற்றி நிலத்தடி நீர் அளவை கண்காணித்தல்.

(d) தரத்தை எட்டும் வகையில் கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியில் உள்ள வாயு சேகரிப்பு முறையினை பராமரித்தல் மற்றும் செயல்படுத்துதல்.

2. கழிவுகளை ஒரு வகை செய்த பகுதியானது, அப்பகுதியின் செயல்பாடு முடிக்கப்பட்டு, அப்பகுதி மூடப்பட்ட பின்னர், 15 ஆண்டுகள் கழித்து தான் அப்பகுதியில் மக்கள் வசிப்பதற்கு உகந்ததாக உள்ளனவா என்பது குறித்து கருதிப்பார்க்க இயலும், மற்றபடி, மண்ணின் நிலைத்தன்மையை உறுதி செய்து, வாயு வெளியேற்றம், நீர்மத்தின் (Leachate) தரம் ஆகியவை குறிப்பிட்ட

தரநிலைகளுக்கிணங்க உள்ளனவா என்பதை உறுதி செய்த பின்னரே பொது மக்கள் குடியேறுவது குறித்து கருதிப் பார்க்க இயலும்.

(I) மலைப் பகுதிக்குண்டான சிறப்பு கட்டுப்பாட்டு நெறிமுறைகள்:–

மலைப்பகுதிகளில் உள்ள நகரம் மற்றும் மாநகரங்களில் உள்ள இடங்களில் இறுதியாக திடக்கழிவுகளை ஒரு வகை செய்வதற்குண்டான குறிப்பிட்ட வழிமுறைகளை உள்ளாட்சி அமைப்பு, அந்தந்த மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசு கட்டுப்பாட்டு குழுவின் உத்தரவின் பேரில் அமைத்திட வேண்டும். இயற்கையாக அழுகும் தன்மையுடைய கழிவுகளை பயன்படுத்த ஏதுவாக பதனிடும் வசதிகளை உள்ளாட்சி அமைப்பு ஏற்படுத்த வேண்டும். எளிதாக மக்கும் தன்மையில்லாத மற்றும் மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகளை சேமித்து அதனை மறு சுழற்சிக்கு குறித்த காலத்திற்கொருமுறை அனுப்பப்பட வேண்டும். மந்தமான மற்றும் எளிதாக மக்கும் தன்மையில்லாத கழிவுகளை சாலைகள் அமைப்பதற்கும் அல்லது மலைகளில் உரிய இடத்தில் நிரப்புவதற்கும் பயன்படுத்த வேண்டும். மலைப்பகுதிகளில் அவற்றை பயன்படுத்துவதற்குப் போதுமான நிலப்பரப்பு இல்லாத நிலையிலும், சாலை அமைப்பதற்கும், நிரப்புவதற்கும் கழிவுகள் பொருத்தமானதாக இல்லாத போது, அக்கழிவுகளை சாதாரணப் பகுதிகளில் உள்ள கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதியைப் பயன்படுத்தி ஒரு வகை செய்ய வேண்டும்.

(J) பழைய கழிவு குவியல் மூடல் மற்றும் மறுசீரமைக்கும் முறை:–

திடக்கழிவு குவியல் அப்பகுதியின் முழுமையான கொள்திறனை அடைந்த பின்னர், அல்லது புதிய மற்றும் உரிய வகையில் வடிவமைக்கப்பட்ட கழிவுகளை ஒரு வகை செய்யும் பகுதிகளில் நிறுவப்பட்டதால், கூடுதல் கழிவுகளை ஏற்றுக்

கொள்ள முடியவில்லையோ அவற்றை மூடவோ அல்லது மறுசீரமைக்க கீழ்கண்ட முறையில் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

(i) கழிவு செயல்முறை மற்றும் இயற்கையிலேயே புதையுண்டு அதன் மூலம் வாயிலாக கழிவுகளை குறைக்கப்பட்டு, அதன் தொடர்சியாக உள்ள எஞ்சிய கழிவுகளை புதிதாக அமைக்கப்பட்ட நிலப்பரப்புகளில் கழிவுகளை ஒருவகை செய்யும் பகுதிகளில் வைக்கப்பட வேண்டும் அல்லது அதில் (ii) இல் குறிப்பிட்டுள்ளவாறு மூடப்பட வேண்டும்.

(ii) திடக்கழிவுகளை மூடியாலோ அலலது ஒளிவீச்சு பயன்படுத்தப்பட்ட பசுமை வீடு வாயுக்களை சேகரிக்கும் பொருட்டு, திடக்கழிவுகளை சவ்வினால் ஆன மூடியினால் மூடப்பட வேண்டும்.

(iii) (ii)–இல் குறிப்பிட்டுள்ளவாறு மூடப்பட வேண்டும். மேலும் கூடுதல் நடவடிக்கைகளான (வண்டல் மற்றும் இதர கரடுமுரடான பண்பற்ற அமைப்பு மண்) வெளியேற்றுவதற்கு மற்றும் மாசுநிறைந்த நிலத்தடி நீரினை கையாளும் முறைக்கான சுற்றுச்சுவர் மற்றும் பிரித்தெடுக்கும் கிணறுகளை ஏற்படுத்த வேண்டும்.

(iv) ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் சுற்றுச்சூழல் பாதிப்பினை குறைப்பதற்கான தக்க ஏனைய யாதொரு வழிமுறைகள்.

## அட்டவணை– II

### [ விதி 16 (1) (b) (e), 16 (4) ] விதியினை காண்க ]

**திடக்கழிவுகளை பதப்படுத்தி, சுத்திகரிக்கும் தர நிலைகள்**

கலப்பு உரத்தின் தரம்: இயற்கையாக அழியக்கூடிய கழிவினை செயல்படுத்துவதற்கு கலப்பு உரமாக்குவது கழிவு செயலாக்குதல் திறத்தின் ஒரு வகை தொழில் நுட்பத்தில் சேர்ந்ததாகும். கலப்பு உர ஆலையின் மூலம் வெளிவரும் மாசுவை கட்டுப்படுத்த கீழ் குறிப்பிட்டுள்ளவற்றை பின்பற்ற வேண்டும். அதாவது,

(a) இயந்திரகத்திற்கு கொண்டுவரப்படும் இயற்கை கழிவுகளை பதப்படுத்துவதற்கு, முன்கூட்டியே உரிய முறையில் சேமித்து வைக்க வேண்டும். முடிந்தவரையில், சேமித்து வைத்துள்ள கழிவுகளை மூடியிருக்க வேண்டும். திறந்த வெளியில் சேமித்து வைப்பதாக இருந்தால் வெளியேற்றும் திறன் மற்றும் நீர்மத்தை கையாளும் முறையில் வெளியேற்றும் வழியாக நிலத்தடி நீர் செல்லும்படியாகவும் நீர்மத்தை சேகரிப்பதற்காகவும் ஊடுருவமுடியாத வகையில் அடித்தளம் அமைத்திருத்தல் வேண்டும்.

(b) தீயினால் ஏற்படும் அபாயம், பறவைகளின் அச்சுறுத்தல், எலிகள், பூச்சிகள் மற்றும் துர்நாற்றத்தினை குறைக்க உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

(c) பராமரிப்பு இயந்திரம் பழுதடைகிற போது அல்லது பராமரிக்கப்படுகிற நேர்வில் கழிவுகளை எடுத்தல் உடனடியாக நிறுத்தப்பட்டு, தற்காலிக செய்முறைப்படுத்துதல் இடத்திற்கு அல்லது தற்காலிக நிரப்பரப்பு நிலங்களுக்கு கழிவுகளை மாற்றுவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இயந்திரம் முறையாக செயல்படும் போது இக்கழிவுகள் மீண்டும் செயல்முறைப்படுத்தப்படும்.

(d) செயல்முறைப்படுத்துவதற்கு முன்னும் பின்னும் கழிக்கப்பட்டவைகள் தினந்தோறும் அகற்றப்பட வேண்டும். அவை அந்த இடத்தில் குவித்து வைக்க அனுமதிக்கப்படமாட்டாது. உரிய விற்பனையாளர்கள் மூலம் கழிக்கப்பட்டவைகள் தக்க முறையில் வெளியேற்றப்படும். மறுசுழற்சி செய்ய முடியாத அதிக வெப்ப ஆற்றல் நிலைகளையும் கொண்டு கழிவுகளைப் பிரித்தெடுத்து அவற்றை ஆற்றல் எரிசக்தி திறனுக்கோ அல்லது RDF தயாரிப்பதற்கோ, சிமெண்ட் ஆலைகளில் இயந்திரகத்தில் துணை செயல்முறைக்கோ அல்லது அனல் மின் நிலையங்களுக்கோ அனுப்ப வேண்டும். அனைத்து செயல்முறைகளிலிருந்தும் கழிக்கப்பட்டவையே சுகாதார மண்பரப்பிகளுக்கு அனுப்பப்படும்.

(e) காற்றுபுகும் இடத்தில் ஊடுருவமுடியாத அடித்தளம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த அடித்தளமானது 50 செ.மீ பருமனுள்ள 10.7 செமீ / நாழிகைக்கும் குறைவான ஊடுருவும் திறன் கொண்ட சிமெண்ட் அல்லது செறிவடக்க களிமண்ணால் கட்டிப்பட்டிருக்க வேண்டும். அடித்தளமானது ஒன்று அல்லது இரண்டு சதவிகித சாய்வுடனும் மற்றும் நீர்மத்தை அல்லது நிலத்தின் மேல் வழிந்தோடும் நீரை அதைச் சுற்றிலும் தொடர்ச்சியாக வடிகால்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(f) சுற்றுப்புற காற்றின் தரம் தவறாமல் கண்காணிக்கப்பட வேண்டும். செய்முறைப்படுத்தும் இயந்திரத்தின் எல்லையுள்ள கீழ்காற்று வழி திசையிலிருந்து வெளியேறும் துர்நாற்றமும் தவறாமல் கண்காணிக்கப்பட வேண்டும்.

(g) ஈரப்பதத்தை பராமரிப்பதற்காக நீர்மங்கள் கலப்பு உர இயந்திரத்தில் மறுசுழற்சி செய்யப்பட வேண்டும்.

(h) இறுதி கலப்பு உரமானது அவ்வப்போது வெளியிடப்படும் உர கட்டுப்பாட்டு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்களை அடைந்திருக்க வேண்டும்.

(i) கலப்பு உரங்கள் பாதுகாப்பாக பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் கலப்பு உரத்தின் தரம் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். அவை யாவன,

| **அளவுகோல்** | **உயிரக்கலப்பு உரம் (FCO 2009)** | **பாஸ்பேட் நிறைந்த உயிரகக் கலப்பு உரம் ( FCO 2013)** |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆர்சனிக் (மிகி/கிலோ) | 10.00 | 10.00 |
| கேட்மியம் (மிகி/கிலோ) | 5.00 | 5.00 |
| கிரோமியம் (மிகி/கிலோ) | 50.00 | 50.00 |
| தாமிரம் (மிகி/கிலோ) | 300.00 | 300.00 |
| ஈயம் (மிகி/கிலோ) | 100.00 | 100.00 |
| பாதரசம் (மிகி/கிலோ) | 0.15 | 0.15 |
| நிக்கல் (மிகி/கிலோ) | 50.00 | 50.00 |
| துத்தநாகம் (மிகி/கிலோ) | 1000.00 | 1000.00 |
| C/N விகிதம் | <20 | 20:1 க்கு குறைவாக |
| PH | 6.5 – 7.5 | (1 : 5 கரைல்) 6.7 அதிக |

| | | அளவு |
|---|---|---|
| ஈரப்பதும், எடை சதவிகிதம் அதிகஅளவு (பெருமம்) | **15.0** | 25.0 |
| மொத்த அடர்த்தி | < 1.0 | 1.6 க்கும் குறைவானது |
| மொத்த உயிரிக் கரிமம் எடை சதவிகிதம் குறைவானது | 12.0 | 7.9 |
| மொத்த நைட்ரஜன் (N ஆக) எடை சதவிகிதம் குறைந்த அளவு (குருமம்) | 0.8 | 0.4 |
| மொத்த பாஸ்பேட் ($P_2$ $O_5$ ஆக) எடை சதவிகிதம் குறைந்த அளவு (குருமம்) | 0.4 | 10.4 |
| மொத்த வெடியுப்பு ($K_2$ O ஆக) எடை சதவிகிதம் குறைந்த அளவு (குருமம்) | 0.4 | - |
| நிறம் | கரும்பழுப்பு நிறத்திலிருந்து கருப்பு நிறத்திற்கு | |
| மணம் | துர்நாற்ற மணம் இல்லை | |
| துணுக்கின் அளவு | குறைந்தபட்சம் 90 சதவிகித பொருளாவது 4.0 மி.மீ IS சல்லடை வழியாக கடந்து செல்ல வேண்டும். | குறைந்தபட்சம் 90 சதவிகித பொருளாவது 4.0 மி.மீ IS சல்லடை வழியாகக் கடந்து செல்ல வேண்டும். |
| கடத்துதல் (dsm-1) ஆக இதை விட அதிகமாக இருக்கக் கூடாது | **4.0** | **8.2** |

மேற்கண்ட உயிரி கலப்பு உரம் ( இறுதி தயாரிப்பு பயன் ) குறித்த வரையறைக்கு மீறி இருப்பின் அவை உணவு பயிர்களுக்குப் பயன்படுத்தப்படாது. ஆனால், அவை உணவு பயிர்களை தவிர ஏனைய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படும்.

B. சுத்திகரிக்கப்பட்ட நீர்மத்தின் தரங்கள்

சுத்திகரிக்கப்பட்ட நீர்மத்தின் வெளியேற்றம் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்குட்பட்டு இருக்க வேண்டும். அவையாவன:

| **வ. எண்.** | **அளவுகோல்** | **தரம் (வெளியேற்றுகிற முறை)** | | |
|---|---|---|---|---|
| | | **உள்ளூர் நிலத்தடி நீர்** | **பொது பாதாள சாக்கடை** | **நிலங்களிலிருந்து வெளியேற்றல்** |
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** | **(5)** |
| **1.** | நீக்கப்பட்ட திண்மங்கள் மிகி/லி, அதிகப்படியாக | 100 | 600 | 200 |

| | | | | |
|---|---|---|---|---|
| **2.** | கரைந்த திண்மங்கள் (உயிரகத்தன்மையில்லாத) மிகி/.லி, அதிகப்படியாக | 2100 | 2100 | 2100 |
| **3.** | PH –ன் மதிப்பு | 5.5 முதல் **9.0** வரை | **5.5** முதல் **9.0** வரை | 5.5 முதல் **9.0** வரை |
| **4** | அமோனிக்கல் நைட்ரஜன் (N ஆக) மி.கி/லி, அதிகப்படியாக | 50 | 50 | . |
| **5** | மொத்த ஜெல்தால் நைட்ரஜன் (N ஆக) மி.கி/லி, அதிகப்படியாக | 100 | . | . |
| **6** | உயிரிவேதி உயிரக தேவை (27 டிகிரி செல்சியஸில் மூன்று நாட்கள்) மி.கி/லி, அதிகப்படியாக | 30 | 350 | 100 |
| **7** | வேதி உயிரக தேவை மி.கி/லி அதிகப்படியாக | 250 | . | . |
| **8** | ஆர்சனிக் (AS ஆக) மி.கி/லி அதிகப்படியாக | 0.2 | 0.2 | 0.2 |
| **9** | பாதரசம் ( Hg ஆக) மி.கி/லி அதிகப்படியாக | 0.01 | 0.01 | . |
| **10** | ஈயம் (Pb ஆக) மி.கி/லி அதிகப்படியாக | 0.1 | 1.0 | . |
| **11** | காட்மியம் (Cd ஆக) மி.கி/லி அதிகப்படியாக | 2.0 | 1.0 | . |
| **12** | மொத்த குரோமியம் (Cr ஆக) மி.கி/லி அதிகப்படியாக | 2.0 | 2.0 | |
| **13** | தாமிரம் (Cu ஆக) மி.கி/லி அதிகப்படியாக | 3.0 | 3.0 | . |
| **14** | துத்தநாகம் (Zn ஆக) மி.கி/லி அதிகப்படியாக | 5.0 | 15 | . |
| **15** | நிக்கல்(Ni ஆக) மி.கி/லி அதிகப்படியாக | 3.0 | 3.0 | . |
| **16** | சயனைடு (CN ஆக) மி.கி/லி அதிகப்படியாக | 0.2 | 2.0 | 0.2 |
| **17** | குளோரைடு (Cl ஆக) மி.கி/லி அதிகப்படியாக | 1000 | 1000 | 600 |
| **18** | புளோரைடு (F ஆக) | 2.0 | 1.5 | . |

| | | | | |
|---|---|---|---|---|
| | மி.கி/லி அதிகப்படியாக | | | |
| 19 | பினாலிக் சேர்மங்கள் ($C_6H_5OH$ ஆக) மி.கி/லி, அதிகப்படியாக | 1.0 | 5.0 | . |

**குறிப்பு:**

சுத்திகரிக்கப்பட்ட நீர்மங்களை உள்ளூர் நிலத்தடி மேற்பரப்பு நீரில் வெளியேற்றும் பொழுது, வெளியேற்றப்பட்ட நீர்மத்தின் அளவு மற்றும் உள்வாங்கும் நீர் ஆதாரத்தில் உள்ள நீர்த்த நீரின் அளவு ஆகியவை உரியவாறு பரிசீலிக்கப்படும்.

**C. எரியூட்டுவதற்கான தரங்கள்:** திடக்கழிவு சுத்திகரித்தலின்போது / வெளியேற்றுகிறபோது எரியூட்டிகளிலிருந்து / வெப்பஞ்சார்ந்த தொழில்நுட்ப உத்திகள் காரணமாக வெளியேறுகிற புகை, கீழ்க்கண்ட தரங்களுக்குட்பட்டு இருக்க வேண்டும்.

| அளவுகோல் | புகையின் தரங்கள் | |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| துகள்கள் | **50** மி.கி/$Nm^3$ | தரமானது, அரை மணிநேர சராசரி மதிப்பிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். |
| HCL | **50** மி.கி/$Nm^3$ | தரமானது, அரை மணிநேர சராசரி மதிப்பிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். |
| $SO_2$ | **200** மி.கி/$Nm^3$ | தரமானது, அரை மணிநேர சராசரி மதிப்பிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். |
| CO | **100** மி.கி/$Nm^3$ | தரமானது, அரை மணிநேர சராசரி மதிப்பிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். |
| | **50** மி.கி/$Nm^3$ | தரமானது, தினசரி சராசரி மதிப்பிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். |
| மொத்த உயிரகக் கரிமம் | **20** மி.கி/$Nm^3$ | தரமானது, அரை மணிநேர சராசரி மதிப்பிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். |
| HF | **4** மி.கி/$Nm^3$ | தரமானது, அரை மணிநேர சராசரி மதிப்பிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். |
| NOx (NO மற்றும் $NO_2$ ஆகியவை $NO_2$ ஆக கருதப்படும் | **400** மி.கி/$Nm^3$ | தரமானது, அரை மணிநேர சராசரி மதிப்பிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். |
| மொத்த இரண்டு அணுத்திறன் கொண்ட ஆக்ஸிஜன்கள் மற்றும் ஃபூராண்கள் | **0.1** மி.கி/$Nm^3$ | தரமானது, ஆறு முதல் எட்டு மணி நேர மாதிரி சோதனையைக் குறிப்பிடுகிறது. தயவுகூர்ந்து மொத்த நச்சுத்தன்மையின் சமவலுவை அறிய சமவலு கொண்ட நச்சுத்தன்மையின் மதிப்பைப் பெற்றுள்ள **17** ஒத்த இயல்புடையவை பற்றிய வழிகாட்டிக் குறிப்புகளைக் காணவும். |
